

# தமிழரசு



1-2-1986 75 காசு







வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த காவலூரில் அமைக்கப் பட்டுள்ள வைணு பாப்பு நினைவு தொலை நோக்கி நிலையத்தை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 6.1.1986 அன்று திறந்து வைத்தார்.





கோவையில் 27.12.1985 அன்று நடந்த தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டியின்போது நடந்த பெண்கள் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.



# சாதனைகள் பல புரிந்து சரித்திரம் படைக்கும்

# தமிழக அரசு

## மேதகு ஆளுநர் திரு. சுந்தர்லால் குரானா

(தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு ஆளுநர் அவர்கள் (திருவள்ளுவர் ஆண்டு 2016, குரோதன-மார்கழித் திங்கள் 24-ஆம் நாள்) 8-1-1986 அன்று ஆற்றிய உரை.)

மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே !

உங்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஆண்டு, தமிழ்நாட்டுக்கும் தமிழக மக்களுக்கும் மேலும் வளஞ்சேர்க்கும் ஆண்டாக அமையும் என நான் நம்புகிறேன்.

2. கடந்த ஆண்டில், நமது நாட்டில், பொருளாதாரத் துறையிலும் அரசியல் துறையிலும் பல முக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்தன. நம் நாடு செம்மையான பொருளாதார வளர்ச்சியை நோக்கி விரைந்து நடைபோடுவதற்கு, புதிதாகத் தொடங்கப்பட்ட ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம், நீண்டகால வரிவிதிப்புக் கொள்கை, தொழில் வளர்ச்சிக்காகத் தளர்த்தப்பட்ட விதிமுறைகள், தொழில் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட வரிவிதிப்பு முறைகள் ஆகியவை ஏதுவாக உள்ளன. அடிப்படை வசதிகளை மேம்படுத்தியும், தொழில் வளர்ச்சிக்கு உகந்த கொள்கைகளை வகுத்தும், வாய்ப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் தற்போது நிலவும் சாதகமான முதலீட்டு சூழ்நிலையைப் பயன்படுத்தி, தொழில் வளர்ச்சியின் வேகத்தை முடுக்கி விடுவதுமே அரசின் நோக்கமாகும். தொழில் வளர்ச்சிக்கு முக்கியமான அடிப்படைத் தேவை மின்சக்தி என்பதைச் சொல்லத் தேவையில்லை. எனவே, மின் உற்பத்திப் பெருக்கத்திற்கு இந்த ஆண்டும் இவ்வரசு அதிகச் சிறப்பிடம் அளிக்கும். ஏழாவது திட்ட நிதி ஒதுக்கீட்டில், இவ்வரசு, மின் உற்பத்தி மேம்பாட்டுக்காக, ஏற்கெனவே, 30 சதவீதத்திற்கும் மேலாக நிதி ஒதுக்கியுள்ளது. பல்வேறு துறைகளில், சீரான வளர்ச்சி ஏற்பட எந்தெந்தத் துறைகளுக்கு ஊக்கமளிக்கக் கருதியுள்ளது என்பதை இந்த உரையினிடையே நான் குறிப்பிடவிருக்கிறேன்.

3. திட்டப் பணிகளை ஆக்கபூர்வமாகவும் செம்மையாகவும் நிறைவேற்றி, எல்லா இலக்குகளையும் எய்திவருகிறது என்ற பெருமை தமிழ் நாட்டுக்கு எப்போதுமே உண்டு. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 3,150 கோடி ஒதுக்கப்பட்டிருக்கையில், 1984—85ஆம் ஆண்டு இறுதி வரை நாம் ரூ. 3,675 கோடி செலவிட்டுள்ளோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு ரூ. 5,750 கோடியாக உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் முதல் ஆண்டில் ரூ. 960 கோடி செலவிட ஒப்புதல் அளித்திருக்கையில், நாம் செலவிடக்கூடிய தொகை ஏறத்தாழ ரூ. 1,050 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கிறோம். வறுமை ஒழிப்புத் திட்டமான இருபது அம்ச திட்டத்தைச் செயற்படுத்துவதில் 1984—85ஆம் ஆண்டில், தமிழ்நாடும், மகாராஷ்டிர மாநிலமும் இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலங்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 1984—85ஆம் ஆண்டில் குடும்ப நலத் திட்டத்தைச் செம்மையுறச் செயற்படுத்தியதற்கான தேசிய விருதாக, தமிழ்நாடு ரூ. 2.5 கோடி பெறும்.

4. வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடிக்க அரசு முழுமூச்சுடன் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் தடையாக விளங்குவது தமிழ்நாட்டில் அவ்வப்போது ஏற்படும் இயற்கைச் சீற்றங்களேயாகும். தமிழ்நாட்டில் கடும் வறட்சியோ பெரும் வெள்ளமோ ஏற்படாத ஆண்டே இல்லையெனச் சொல்வது மிகையாகாது. கடந்த ஆண்டுகூட இதற்கு விலக்கு இல்லை. 1985 நவம்பரில் சென்னை மாநகர், தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் இதுவரை கண்டிராத அளவிற்குப்


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017

குரோதன - தை 19

மலர் : 16 இதழ் : 15

1-2-1986


பெருமழை பெய்ததை அனைவரும் அறிவர். தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் புகுந்து கடும் சேதம் விளைந்ததையும் வெள்ளத்தில் சிக்கிப் பலர் இன்னுயிர் இழந்த கொடுமையையும் நாம் இன்னும் மறக்கவில்லை. போர்க்கால அடிப்படையில் நிவாரணப் பணிகளையும், மறுவாழ்வுப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. பாரதப் பிரதமர் நேரில் வந்து வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டுச் சென்றமைக்கும், வெள்ளச் சேதத்தை மதிப்பிடவும், நிவாரண உதவி குறித்து பரிந்துரைக்கவும், உரிய நேரத்தில் அதிகாரிகளை அனுப்பியமைக்கும் நாம் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். உடனடி நிவாரணப் பணிகளையும், செப்பனிடும் பணிகளையும் மேற்கொள்வதற்காக, மத்திய அரசின் உதவியை எதிர்பார்த்து, மாநில அரசு, ஏற்கெனவே ரூ. 26.26 கோடி செலவிட அனுமதி வழங்கியுள்ளது. மொத்த நிவாரணத் தொகையை ரூ. 66.81 கோடியாக வரையறுத்து, மத்திய அரசு, அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. இதன் அடிப்படையில், மேற்கொண்டும் தொகைகள் அனுமதித்து ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்பட உள்ளன.

5. ஸ்ரீலங்காவில் தொடர்ந்து இன வன்முறை தலை விரித்தாடி வருவது குறித்து மாநில அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. விடுதலைப் போராளிகளுடனும், தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியினருடனும் பேச்சு வார்த்தை தொடராத நிலையில், அமைதி உடன்படிக்கையை மீறி இலங்கை இராணுவம் தமிழ் மக்கள்மீது வன்முறைத் தாக்குதல் நடத்துவதை இந்த அரசு கண்டிக்கிறது. இதுபற்றி தக்க நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தியுள்ளது. சென்ற ஆண்டு நான் சட்டமன்றத்தில் உரையாற்றும்போது, ஸ்ரீலங்காவிலிருந்து வரும் அகதிகள் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். 1983 ஜூலைத் திங்களிலிருந்து இந்தியாவிற்குப் பெரும் எண்ணிக்கையில் வந்த அகதிகளைக் கவனித்துக் கொள்ள அரசு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. தோராயமாக, 1.25 இலட்சம் அகதிகள் ஸ்ரீலங்காவிலிருந்து வந்துள்ளனர். இதில், ஆதரவற்ற 30,000 பேர், மாநிலத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் தங்கியிருக்க வசதி செய்யப்பட்டுள்ளது. நிவாரணப் பணிகளுக்காகவும் மறுவாழ்வுப் பணிகளுக்காகவும் இதுவரையில் மொத்தம் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவில் நடைபெறும் கலவரத்தையொட்டி தமிழகம் வந்துள்ள ஆதரவற்ற தமிழ் அகதிகள் மீண்டும் ஸ்ரீலங்காவிற்கு அமைதியாகத் திரும்பிச் சென்று, சுமுகமான நிலை ஏற்படாத வரையில், ஸ்ரீலங்காவில் உள்ள இந்தியக் குடியுரிமை பெறத் தகுதியுள்ளவர்களை இந்தியா ஏற்க முடியாது என்று பிரதமர் தெரிவித்த கருத்தை இந்த அரசு வரவேற்கிறது.

6. நடப்பாண்டில் அரசு ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டிய துறைகள் குறித்து விவரிப்பதற்கு முன்னர் சில முக்கிய துறைகளின் பணிகளையும் சாதனைகளையும் கீழே நான் விவரித்துள்ளேன்.

7. வளர்ச்சிப் பணி அனைத்துக்கும் அடிப்படையானது மின்சக்தி என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தத் திட்டச் செலவான ரூ. 5,750 கோடியில், மின்சக்தி வளர்ச்சிக்கு மட்டும் ரூ. 2,000 கோடி செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது.

8. சென்ற ஆண்டில், அனல்மின் நிலையங்களில் மின் உற்பத்தித் திறனை அதிகரித்திருப்பது, மின் வாரியத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். எண்ணூர் அனல்மின் நிலையத்தில் முந்தைய ஆண்டு 35 சதவீதமாக இருந்த மின் உற்பத்தித் திறன், 1985—86ஆம் ஆண்டில் முதல் எட்டு மாதங்களில் 50.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. தூத்துக்குடி அனல்மின் நிலையத்திலும் மின்



உற்பத்தித் திறனைக் கணிசமான அளவு அதிகரிக்கச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மின் உற்பத்தித் திறன் 1983—84-ல் 50.5 சதவீதமாக இருந்த நிலை மாறி, 1984—85-ல் 62 சதவீதமாக உயர்ந்துள்ளது.

9. எனினும், வளர்ச்சிப் பணிகள் பெருகப் பெருக மின்சக்தியின் தேவையும் விரைவாக அதிகரித்து வருகிறது. எடுத்துக்காட்டாக, 1983—84-ல் உற்பத்தி செய்யப்பட்ட 10,377 மில்லியன் யூனிட் மின்சக்தி, 1984—85ஆம் ஆண்டில் 13,731 மில்லியன் யூனிட்டாக உயர்ந்தபோதிலும் மின் பற்றாக்குறையை முற்றிலுமாக நீக்க முடியவில்லை. அதிகரித்து வரும் மின்சக்தியின் தேவையைக் கருத்திற்கொண்டு, ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,416 மெகாவாட் கூடுதல் நிறுவு திறன் கொண்ட மின்சக்தி உற்பத்தி நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.


10. கல்வியை மக்களிடையே பரப்பவும், மக்களின் தேவைகளுக்கு உகந்ததாக கல்வித் திட்டத்தை மாற்றவும் அரசு முயன்று வருகிறது. 1985—86-ல், 85 புதிய உயர்நிலைப் பள்ளிகளும், 49 புதிய மேல்நிலைப் பள்ளிகளும் தொடங்கப்பட்டுள்ளன. புதிய பள்ளிக் கட்டிடங்களைப் படிப்படியாகக் கட்டும் திட்டத்தை அரசு மேற்கொள்ளும் என்று நான் என்னுடைய முந்தைய உரையில் குறிப்பிட்டிருந்தேன். அவ்வாறே, 1985—86-ல் இப் பணியை மேற்கொள்ள 1·50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைத் தொழில் கல்வி முறைக்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. 1983—84ஆம் ஆண்டிலேயே, நாட்டில் செயற்பட்டுக் கொண்டிருந்த 1,600 வாழ்க்கைத் தொழில் கல்வி நிலையங்களில் பாதிக்கு மேல் தமிழ்நாட்டில் மட்டும் இருந்தனஎன்பது குறிப்பிடத்தக்கதாகும். 1984—85-ல், தமிழ்நாட்டில் உள்ள 3.32 இலட்சம் மேல்நிலைப் பள்ளி மாணவர்களில், 61,502 மாணவர்கள் வாழ்க்கைத் தொழில் பாட முறையைப் பயின்றனர். மொத்தமுள்ள 1,541 மேல்நிலைப் பள்ளிகளில், 969 மேல்நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் பாடமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. வாழ்க்கைத் தொழில் கல்வி பாடமுறையை அதிக அளவில் செயலாக்குவது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் என்று நம்புகிறோம்.

11. இவ்வரசு, ஊரக வளர்ச்சிக்கு எப்போதுமே தலையாய முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது என்பதை ஊரக வளர்ச்சித் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் போன்றவை மிகுந்த ஊக்கத்துடனும் செம்மையாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதிலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 146.61 கோடி செலவிடப்பட்டது. இதனால், 14 இலட்சம் மக்கள் பயனடைந்தனர். 1985—86-ல் இத் திட்டத்தின்கீழ், 2.73 இலட்சம் குடும்பங்கள்

பயனடையும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1985–86-ல் 287 இலட்சம் மனித-நாட்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக, ரூ. 41 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல, 1985–86-ல் கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின்கீழ், 299 இலட்சம் மனித-நாட்களை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் இத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும் தொகை மூலம் கிராமப்புறங்களில் நிலையான பொதுச் சொத்துக்களை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**12.** உணவு உற்பத்தியைப் பெருக்க அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், ஆண்டொன்றுக்கு 69.17 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் உணவு தானியங்களும், 3.42 இலட்சம் மெட்ரிக் டன் பயறு வகைகளும், 13.425 இலட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஆண்டு ஒன்றுக்கு 105 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள், 6 இலட்சம் மெட்ரிக் டன் பயறு வகைகள் மற்றும் 18.98 இலட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை எய்த புதிய தொழில் நுட்ப முறைகளைச் செயலுக்குக் கொண்டுவர பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**13.** தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக, மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மிகக் குறைந்த அளவில் தண்ணீர் இருந்தது. இருந்தாலும், தஞ்சைப் பகுதியில் முறைப் பாசனத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் புயலுடன் அதிக மழை பெய்து, குறிப்பாக, தஞ்சை, தென்னார்க்காடு, செங்கற்பட்டு போன்ற பகுதிகளில் பெருஞ் சேதம் விளைவித்தது. தஞ்சை மாவட்டத்தில் அதிக மழை பெய்தாலும் அது விவசாயத்திற்குப் பயன்படாமல் வீணாகக் கடலில் கலந்தோடு சம்பா பயிரை வெகுவாகப் பாதித்தது. இத்தகைய கடுமையான இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், மற்ற பகுதிகளில் நெல் சாகுபடியைத் தீவிரப்படுத்தி, அதன் மூலம் இந்த இழப்பை ஈடு செய்ய அரசு முயன்றது. இதன் காரணமாக மாநிலத்தின் வேறு பகுதிகளில் குறுவை நெல் விளைச்சல் அதிகமாகி 50 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உற்பத்தி அளவை மாநில அரசு எய்த முடியும் என நம்புகிறோம்.



**14.** அண்மையில், மாநில அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, கர்நாடக அரசு மின்சக்திக்கு ஈடாக 5 டி.எம்.சி. நீர் வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இருப்பினும், இப் பிரச்சினையில் இரு மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு நிலையான தீர்வு விரைவில் ஏற்பட வேண்டியது இன்றியமையாததாகும். தமிழ்நாட்டிற்கும், கர்நாடக மாநிலத்திற்கும் மன நிறைவு ஏற்படுகின்ற வகையில் இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண தமிழக முதல்வர் அவர்கள் பேச்சு வார்த்தைகளை ஏற்கெனவே தொடங்கியுள்ளார். இப் பேச்சு வார்த்தைகளை மாநில அரசு தொடர்ந்து மும்முரமாக நடத்தி வருகிறது. 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஏற்கெனவே விவரித்துள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் சுமுகமான உடன்பாடு ஒன்று விரைவில் ஏற்படும் என்று நம்புகிறோம்.

**15.** குறைந்தளவு நீர் வழங்கப்படுவதன் காரணமாகவும், நீர் வழங்கப்படுவது நிச்சயமற்றதாக இருப்பதாலும், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், புன்செய்ச் சாகுபடி தொழில் நுட்ப உத்திகளைப் பின்பற்றவுமான வழிமுறைகளை மாநில அரசு உருவாக்க வேண்டியுள்ளது. அவ்வாறே, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த "3 பி" என்றழைக்கப்படும் திட்டத்தைப் பிரபலப்படுத்த அரசு பெரிய அளவிலான சிறப்புச் செய்முறை விளக்கங்களை நடத்தியுள்ளது. எத்தகைய பருவ நிலையிலும் புன்செய் நிலச் சாகுபடி செய்யப் பொருத்தமான தொழில் நுட்ப உத்தியைப் பிரபலப்படுத்துவதும் மற்றொரு நடவடிக்கையாகும்.

**16.** பாதகமான பருவ நிலை காரணமாக, இவ்வாண்டில் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால், பொது வினியோக முறையின் மூலம் அதிக அளவில் அரிசி வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கடந்த நான்காண்டுகளில் மாதம் ஒன்றுக்கு சராசரியாக 55 ஆயிரம் டன் அரிசி வழங்கப்பட்டிருக்கையில், இவ்வாண்டில் மாதம் ஒன்றுக்கு 94 ஆயிரம் டன் வழங்கப்பட்டு வருகிறது. பொது வினியோக முறையின்கீழ்த் தேவைப்படும் அதிக அளவிலான அரிசியை வழங்க இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் அரசு எடுத்து வந்துள்ளது. காவிரி டெல்டா பகுதியிலுள்ள நேரடிக் கொள்முதல் நிலையங்களுக்குக்கொண்டு வரப்படும் நெல்லிற்கு வழங்கப்பட்டு வந்த உற்பத்தி ஊக்கத் தொகை இவ்வாண்டு குவின்டால் ஒன்றுக்கு ரூ. 15-லிருந்து ரூ. 20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 1—11—1985 முதல் காவிரி டெல்டா பகுதியில் ஏகபோக கொள்முதலை அரசு மேற்கொண்டுள்ளது. இங்கு குவின்டால் ஒன்றுக்கு அளிக்கப்படும் உற்பத்தி ஊக்கத் தொகை ரூ. 35ஆக உயர்த்தப்பட்டுள்ளது. குறுவைப் பருவத்தில் 2.9 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது. பொது வினியோக முறையின்கீழ் அரிசி வழங்க, தேவையான அளவில் இருப்பு வைத்துக் கொள்ள முதற்கண் 31—1—1986வரை சம்பாப் பயிருக்கும் ஏகபோக கொள்முதலை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**17.** தமிழ்நாட்டுக்கு, மைய ஒதுக்கீட்டிலிருந்து அதிக அளவில் அரிசியை வழங்குமாறு மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. இப்போது, மைய அரசு 1985 செப்டம்பர் திங்களுக்கான ஒதுக்கீட்டை 25 ஆயிரம் டன்னிலிருந்து 35 ஆயிரம் டன்னாகவும், 1985 அக்டோபர் திங்கள் முதல் 40 ஆயிரம் டன்னா

கவும் உயர்த்தியுள்ளது. 1985ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களுக்குக் கூடுதலாக 50 ஆயிரம் டன் அரிசியை ஒதுக்கவும் மத்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. மைய அரசின் இந்த நல்லெண்ண நடவடிக்கையை இந்த அரசு வரவேற்கிறது. வருங்காலத்தில் மத்திய அரசு இந்த ஒதுக்கீட்டை 1 இலட்சம் டன்னாக உயர்த்தும் என்று நம்புகிறோம். பொது வினியோக முறையின் மூலம் போதிய அளவிற்கு உணவுப் பொருளை வழங்குவதற்கு, மாநில அரசு, இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**18** ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுமார் 10 ஆயிரம் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதிகளை அதிகப் படுத்த, அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது. மக்களின் குறைந்த அளவுத் தேவைகளை நிறைவு செய்யும் திட்டத்தின்கீழ் 1985–86ஆம் ஆண்டில் இதற்கு ரூ. 24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19.** சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகப்படுத்த ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் நிதி உதவியுடன் ஆரணியாறு, கொற்றலையாறு வடிநிலப் பகுதியில் நிலத்தடி நீரியல் ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு 55 மில்லியன் லிட்டர் நீரை வழங்குவதற்காக முதற்கட்டமாகத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற அரசு அனுமதி வழங்கி யுள்ளது. இத் திட்டத்திற்கான மொத்த மதிப் பீட்டுச் செலவு ரூ. 98 கோடியாகும். இத் திட்டத் திற்கு, உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**20.** இவ்வரசு, மக்கள் நலத்தில் அக்கறை கொண்ட அரசு என்ற நற்பெயரை ஈட்டியுள்ளது. இவ்வரசு தொடங்கியுள்ள பல முன்னோடித் திட்டங்கள், தேசிய அளவில் முன்மாதிரிகளாக விளங்குவதோடு உலக அரங்கில் பாராட்டுதல் களையும் பெற்றுள்ளன. சென்ற ஆண்டு நான் ஆற்றிய உரையில், குழந்தைகள் நல மேம் பாட்டுக்காக அடங்கல் திட்டம் ஒன்று செயலுக்குக் கொண்டுவரப்படும் எனக் குறிப்பிட்டிருந்தேன். அதற்குத் தற்போது செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளதென்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஊட்டச் சத்து வழங்குவது, சுகாதாரத் திட்டங்கள் முதற் கொண்டு, இலவச உடைகளும் பாடப் புத்தகங் களும் வழங்குவது வரை குழந்தைகளின் அடிப் படைத் தேவைகளை அரசு நிறைவு செய்து வருகிறது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ், தற்போது 86.88 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 58.10 இலட்சம் சிறார் பயன் பெறுவர். சீருடைகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பல்வேறு தையல் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 40,000 மகளிர் வேலைவாய்ப்புகள் பெறுவர் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இதுபோன்ற அடங்கல் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி வகுப்பதுடன், வருங்காலத்தில் ஆரோக்கியமான தலைமுறையையும் உருவாக்கும் எனத் திடமாக நம்பலாம். இதன் மூலம், எதிர்காலத்தில் வலுவானதொரு தமிழகம் உருவாகும் என்பது திண்ணம்.

**21.** திட்டமிட்ட குடும்ப அமைப்பு முறையை மக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்ய, மக்கள் தொடர்புச் சாதனங்கள் முக்கியமென்பதை உணர்ந்து, மக்கள் தொடர்பு நடைமுறைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. விவசாயிகள், மாத ஊதியம் பெறும் பணியாளர்கள், மகளிர் ஆகியோருக்கு. தனித்தனியாகக் குறிப்பிட்ட வகையில் குடும்ப நலப் பிரச்சாரம் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு நிலையில் உள்ள மக்களின் திறனுக்கேற்ப வேறுபட்ட வகையில் குடும்ப நலப் பிரச்சாரம் செய்ய, பிரச்சார அணுகு முறையில் வல்லுநர்களாகத் திகழ்பவர் களையும் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனைகள், நிறுவனங்கள் ஆகியவற்றில் இது தொடர்பாக மேலும் வசதி செய்து கொடுக்க, தொலைக்காட்சி, காணொலி (V.C.P.) போன்ற நவீன கருவிகளைத் தொழில் அதிபர்கள், கொடைவள்ளல்கள் மூலம் நன்கொடையாகப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்குக் கேளிக்கை வசதிகளைச் செய்து கொடுப்பது நல்ல பலனை அளித்துள்ளது. இதில் மேலும் தீவிரமாக முயற்சிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**22.** குடும்ப நல சிகிச்சை குறித்த பணிகளை மேம்படுத்துவதற்கு, ஆரம்ப சுகாதார நிலையங் கள், வட்ட மருத்துவமனைகள் ஆகியவற்றில்



போதிய அளவிற்குச் சாதனங்களைக் கொண்ட அறுவை அரங்குகளைப் படிப்படியாகக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்போதுதான், அத்தகைய பணிகள் கிராமப் பகுதிகளில் குடும்ப நலச் சிகிச்சையை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் தங்கள் வீட்டிலிருந்து மிக அருகில், அதாவது, 8 முதல் 10 கி.மீ. தொலைவிற்குள் இந்த வசதிகளைப் பெற இயலும்.

**23.** குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைப் பதற்காக, நோய் எளிதில் பற்றக்கூடிய வயதுத் தொகுதிகளில் உள்ள அனைத்துக் குழந்தை களுக்கும் பெருமளவில் நோய்த் தடுப்பு ஊசி போடும் வகையில், 19–11–1985ஆம் நாளன்று, மத்திய அரசு தொடங்கிய "அனைவருக்கும் நோய்த் தடுப்பு ஊசி போடும் திட்டம்", மூன்று மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூன்றாவது கட்டத்திலேயே 95 சதவீதத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் நாம் மேற்கொண்டுள்ள இம் முயற்சிகள் குடும்ப நலத் திட்டத்தில் நம்முடைய சாதனையை மேலும் அதிகரிக்கும்.

**24.** என்னுடைய கடந்த உரையில் குறிப்பிட்டிருந்த தைப்போல, ஆதி திராவிடரின் ஒருங்கிணைந்த, விரிவான வளர்ச்சிக்கான எல்லா நடவடிக்கைகளை யும் அரசு மேற்கொண்டு வருகிறது. 1985–86ஆம் ஆண்டில் ஆதி திராவிடரின் பொருளாதார மேம்பாட்டுக்காக, ரூ. 126.16 கோடி செலவில்

சிறப்புக் கூடுதல் திட்டம் மேற்கொள்ளப் பட்டது. ஆதி திராவிடர்களின் சமூக-பொருளாதார மேம்பாட்டை மேலும் வலுப்படுத்த அவர்களுக்கு அதிகப்படியான கல்வி வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும். தற்போதுள்ள பள்ளிகளின் தரத்தை உயர்த்த சிறப்புத் திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

25. சென்ற ஆண்டு கூட்டத் தொடரில் நான் உரையாற்றுகையில், அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் குடும்ப நல நிதியை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000ஆக உயர்த்துவது குறித்துக் குறிப்பிட்டிருந்தேன். இது தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரை குறித்த ஆணைகளையும் அரசு விரைவில் பிறப்பித்துள்ளதோடு இந்த ஆணைகளினால் ஏற்படக் கூடிய செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 90 கோடியாக இருந்தபோதிலும், இப் பரிந்துரைகளை 1—10—1984-லிருந்தே செயலுக்குக் கொண்டு வர அரசு தயங்கவில்லை. இதிலிருந்து, இந்த அரசு, பணியாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பது தெளிவாகும். இப்போதும்கூட, முறையீடுகள் வரப்பெற்றதன் பேரில் ஒரு நபர் குழுவை அரசு அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை வரப்பெற்று, அதனைப் பரிசீலித்த பின்னர், அரசு விரைவில் ஆணைகள் பிறப்பிக்கும்.

26. முக்கியமான. மக்கள் நலப்பணிகளை மேற்கொள்வதுடன் பொருளாதார வளர்ச்சிக்கான புதிய துறைகளிலும் கவனம் செலுத்துவதுதான் இம்மாநில அரசின் முயற்சியாகும். நான் கடந்த ஆண்டு குறிப்பிட்டதுபோல, புதிய எரிபொருளைக் கண்டறிய பெரிய அளவிலான திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது. தொழில் துறை மற்றும் அரசு நிறுவனங்களில் சூரிய வெப்ப வெந்நீர் ஏற்பாடு, சூரிய வெப்பக் காற்று ஏற்பாடு போன்றவற்றை உருவாக்க தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு அமைப்புக்கு அரசு ரூ. 95 இலட்சம் அனுமதித்துள்ளது. காற்றுமூலம் சக்தி உற்பத்தி செய்யும் திட்டத்தையும் ஒரு கோடி ரூபாய் செலவில் அரசு மேற்கொண்டுள்ளது.

27. நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடம் பெற வேண்டுமென்பதே அரசின் தலையாய நோக்கமாகும். இந்த நோக்கத்தை எய்துவதற்காக, இம் மாநிலத்தில் தொழில்களை



அமைப்பதற்குத் தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் முயற்சிகள் அனைத்தையும் மாநில அரசு எடுத்துள்ளது. தொழில்கள் தொடங்குவதற்கு இசைவளிப்பது, தொழில் தொடங்குவதற்கு உரிமங்கள் பெற்றுத் தருவது ஆகிய பணிகள் மிக உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. 1985ஆம் ஆண்டில், தொழில்கள் தொடங்குவதற்கான 38 இசைவுக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

28. ரூபாய் 1,177 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வரும் மயிலாடுதுறை கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 1986 டிசம்பரில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

29. புதிதாகப் பெருந்தொழில்கள் தொடங்குவதில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர்ந்து முக்கியப் பங்கு வகித்து வருகின்றது. இந் நிறுவனம் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. அவை பல்வேறு நிலைகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந் நிறுவனம் மேற்கொண்டுள்ள பொதுத் துறைத் திட்டங்களில் ஒன்றான தமிழ்நாடு வெடிமருந்துத் தொழிற்சாலை 1985ஆம் ஆண்டில் சோதனை முறையில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

30. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், மேற்கொண்டுவரும் வழக்கமான தொழில் வளர்ச்சி நடவடிக்கைகளுடன், உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்—2-ன்கீழ் சிறப்புத் தொழில் வளர்ச்சித் திட்டம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளது. முகப்பேரில் 145 தொழில் பிரிவுகள் அமைக்க அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவும் தொழிற்சாலைகளுக்கான கட்டிடங்கள் கட்டிக் கொடுப்பதற்கும், இயந்திரங்களை வாங்கி நிறுவுவதற்கும் இத் திட்டம் வகை செய்கிறது. இவற்றிற்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் நிதி உதவி அளித்து வருகிறது. இத் திட்டம் 1986ஆம் ஆண்டு இறுதியில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

31. ஏற்றுமதி அளவை அதிகரிப்பதற்காக, ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் மண்டலத்தை மத்திய அரசு சென்னையில் அமைத்துள்ளது. இத்திட்டத்தின் முதற் கட்டப் பணிக்காக, மாநில அரசு சுமார் 158 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. முதற் கட்டத்தில் அமைக்கப்படும் 120 தொழில் பிரிவுகளுடன் இரண்டாவது கட்டத்தில் அமைக்கப்படவுள்ள 250-க்கும் மேற்பட்ட தொழில் பிரிவுகளுக்கு சுமார் 300 ஏக்கர் நிலத்தைப் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இத் திட்டத்திற்காக மத்திய அரசு 74 விண்ணப்பங்களுக்கு இசைவளித்துள்ளது.


32. பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்யும் முதலீடு மிகக் குறைவாக உள்ளதைச் சுட்டிக்காட்டி, அதை ஈடு செய்ய வேண்டுமென மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. மணலியில் உள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 2.8 மில்லியன் டன் என்ற உற்பத்தித் திறனை 5.6 மில்லியன் டன்னாக அண்மையில் உயர்த்தியுள்ளது. உதகமண்டலத்தில் ரூ. 200 கோடி செலவில் வண்ணத் திரைப்படச் சுருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும், ரூ. 170 கோடி செலவில் எக்ஸ்—கதிர் படச் சுருள் தயாரிக்கும் தொழிற்சாலையையும் அமைக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.


33. பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த, ஒருமித்த முயற்சியை மேற்கொள்வதற்கு

அடிப்படையான மனித ஆற்றல், அடிப்படை வசதி ஆகிய வகையில் வலுவான அமைப்பு இம் மாநிலத்தில் இருந்து வருகிறது என்பது மேற் சொன்னவற்றிலிருந்து தெரியவரும். ஏற்கெனவே நான் குறிப்பிட்டவாறு, நாட்டில் பெருமளவில் தொழில்களில் முதலீடு செய்வதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. மத்திய அரசின் இந் நடவடிக்கையை முழுமையாகப் பயன்படுத்தி, உயரளவு பயன்களைப் பெறக் கருதியுள்ளோம். பொருளாதார வளர்ச்சி இன்றியமையாதது என்பது உண்மைதான். ஆனால், அதே சமயத்தில் இந்த வளர்ச்சியின் பயன்கள் ஏற்றத் தாழ்வின்றி சாதாரண மனிதனுக்கும் கிட்டும் வகையில் வழி வகுக்கப் படுவதும் அவசியமாகும். இந்த அரசை எதிர் நோக்கி உள்ள பிரச்சினைகளில் முக்கியமான ஒன்று, வேலை வாய்ப்பின்மையாகும். இதைச் சமாளிக்க வேண்டுமெனில், நமது தொழில் வளர்ச்சித் திட்டங்கள், பெரிய, நடுத் தரத் தொழில்களை மட்டும் நம்பியிராமல், அதிகமான வேலை வாய்ப்பைக் கிராமப்புற மக்களுக்கு அளிக்கக் கூடிய, கைத்தறி, கதர், குடிசைத் தொழில் மற்றும் அமைப்பு ரீதியிலும், அமைப்பு ரீதியில் அல்லாமலும் உள்ள இதர சிறு தொழில்கள் ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்தில் அமைய வேண்டுமென்பதே இவ்வரசின் குறிக்கோளாகும். கடந்த சில ஆண்டுகளில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் சேவைத் துறையின் பங்கு அதிகரித்துள்ளது. இத் துறைக்கு உதவி அளிப்பதோடு அதனை வலுப்படுத்தவும் வேண்டியுள்ளது. இந்நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, நடப்பாண்டில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது:—

(1) பெரிய, நடுத்தரத் தொழில்களுக்கு இன்றியமையாத அடிப்படை வசதிகளை அளித்துள்ளதுடன், முதலீட்டு உதவித் தொகை வழங்குதல், வட்டியில்லா விற்பனை வரிக் கடன்கள் அளித்தல் ஆகிய இரண்டுமே மாநில அரசு அவற்றை ஊக்குவிப்பதற்காக வழங்கும் முக்கிய சலுகைகளாகும். இச்சலுகைகளின் செயல் முறையைச் சீரமைப்பதன் மூலம் குறிப்பிட்ட தொழில்களுக்கும் பின் தங்கிய பகுதிகளுக்கும் முழுமையாக இப்பயன்கள் கிடைக்கச் செய்ய அரசு முயற்சி எடுக்கவுள்ளது.

(2) நமது திட்டப் பணிகளில் மின்சக்தி உற்பத்திக்கு ஏற்கெனவே உயரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஏழாவது திட்டக்கால இறுதிக்குள் மின்சக்திப் பற்றாக் குறையை நீக்கிவிட மாநில அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வெளிநாட்டு உதவி அல்லது வணிகக் கடன் கொண்டு, தனியார் துறையின் உடனுழைப்புடன் தனிப்பட்ட கழகங்கள் மூலமாக கூடுதல் மின் உற்பத்திப் பணியை மேற்கொள்வது பற்றியும்





அரசு பரிசீலித்து வருகிறது. இதனால், மின் உற்பத்தித் திறனளவை அதிகரிக்கும் பணி துரிதப் படுத்தப்படும்.

(3) மத்திய அரசு அறிவித்துள்ள துணிக் கொள்கை, கைத்தறித் துறைக்குப் போதுமான ஆதரவு அளிக்காது என்று நாம் ஏற்கெனவே மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளோம். கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருக்கும் பொருட்டு, அத்துறையை நவீனமயமாக்குவது மட்டுமின்றி, தகுந்த ஊக்கத் தொகைகளையும் நிதி வகையிலான அடிப்படை வசதிகளையும் அளிக்க வேண்டியது அவசியமாகும். அப்போது தான், அதிகரித்த விற்பனை தொடர்ந்து நீடிக்க இயலும். மேலும், இத்தகைய அதிக உற்பத்தியால் உருவாக்கப்படும் வேலை வாய்ப்புகளும் தடையின்றி நீடிக்க முடியும். இது தொடர்பான நமது நிலையையொட்டி, கைத்தறித் துறைக்குரிய பாதுகாப்பை அளிக்கின்ற வகையில் அவசியமான மாற்றங்களை நமது மதிப்பிற்குரிய பிரதமர் செய்வார் என நம்புகிறோம்.


(4) மைய அரசைப்போலன்றி, தங்கள் திட்டப் பணிகளுக்குத் தேவையான நிதிக்கு வெளிநாட்டு உதவியையோ அல்லது உள்நாட்டு கடன் வசதியையோ நேரடியாகப் பெறுகின்ற வாய்ப்புகள் மாநில அரசுகளுக்கு இல்லை. இந்நிலையில் பொதுத்துறை நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கி வருவாய் ஆதாரமாக அமைய வேண்டும் என்று பிரதமர் தெரிவித்த கருத்து மாநில அரசுகளைப் பொறுத்த வரையில் மிகப் பொருத்தமானதாகும். அவ்வகையில், பொதுத் துறை நிறுவனங்கள், அரசுக்கு ஒரு சுமையாக அமையாமல், வருவாய் அளிக்கின்ற, நாட்டின் வளர்ச்சிக்கு உரமிடுகின்ற வகையில் அவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதில் இவ்வரசு கவனம் செலுத்தும். அரசின் பல்வேறு துறைகள், அவற்றிற்கென நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவு செய்வதற்கு ஏற்ப, அவற்றைச் சில கண்டிப்பான ஒழுங்கு முறைகளுக்குட்படுத்தவும் அவை செயற்படும் விதத்தைக் கண்காணிக்கவும் அரசு ஏற்கெனவே திட்டம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளது.

(5) சிறு தொழில் துறையில், தமிழ்நாடு, குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி கண்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட தொழில் துறைகளில் கூட்டுறவு முறையை அறிமுகப்படுத்துவதில் தமிழ் நாடு முன்னோடியாக விளங்குகிறது. இவ்வரசு, ஏற்கெனவே, பல்வேறு மாவட்டங்களில் தொழில் வள ஆய்வுகளை நடத்தியுள்ளது. நமது தேவைகளை முழுமையாகவோ அல்லது எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கேனும்

நிறைவு செய்வதற்கு ஏற்றாற்போல், பலதரப்பட்ட தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான பணிகளை ஒருமுகப்படுத்துவது மிக அவசியம். ஒரு சாதாரணக் குடிமகனின் அடிப்படைத் தேவைகள், நமது மாநிலத் தொழில் உற்பத்தியிலிருந்தே நிறைவு செய்யப்படும் நிலை உருவாக வேண்டும். இந்த வகையில் காணப்படும் இடைவெளிகளை, தொழில் உற்பத்திக்கு ஊக்க மளிப்பதன்மூலம் நிரப்ப வேண்டும். இதற்கென, தொழில் மற்றும் வணிக இயக்குநர் அலுவலகத்தில் மைய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இந்த அமைப்பு, இதற்காகத் தேவைப்படும் துறைகள் என்று தெரிந்தெடுக்கப்பட்டவற்றிற்கு, அவை சிறுதொழில் துறைகளாக இருந்தாலும் அல்லது கிராமத் தொழில் களாக இருந்தாலும், அவற்றின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகள், சலுகைகள், ஏனைய உதவிகளைக் கண்டறியும். இதற்கு, குறிப்பிட்ட தொழில்களைக் கவனித்துவரும் அரசின் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும். இந்த ஒருங்கிணைப்புப் பணியை இந்த அமைப்பு நிறைவு செய்யும் என்று கருதப்படுகிறது.

(6) ஆதிதிராவிடர் போன்ற நலிந்த பிரிவினருக்குக் குறித்த காலத் திட்டங்கள் மூலமாக உதவி அளிக்க அரசு கருதியுள்ளது பற்றி, கடந்த ஆண்டு நான் குறிப்பிட்டிருந்தேன். இம் மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல தேசிய திட்டங்களுக்குத் துணையாக இத் திட்டங்கள் அமைய வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். மக்கள் நல்ல முறையில் வாழ வேண்டுமாயின் வீட்டு வசதி இன்றியமையாததாகும். இந்த அடிப்படை வசதி, ஏழை, எளிய மக்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று அரசு உறுதியாகக் கருதுகிறது. வீடில்லாதோருக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் பெரியதொரு திட்டமொன்றை அடுத்த நிதி ஆண்டில் செயற்படுத்த அரசு கருதுகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். போதிய வீட்டு வசதியின்றி அல்லலுறும் ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர் ஆகியோருக்காக 5 இலட்சம் வீடுகள் கட்டப்படும். அதே போன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் ஏனைய குடும்பங்களுக்கும் 5 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இந் நலிந்த பிரிவினர் களுக்கு வீட்டு வசதியை அளிக்க வேண்டுமென்ற பாராட்டத்தக்க நோக்கத்தை மூன்றாண்டுகளில் முப்பது இலட்சம் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டி முடித்து விட வேண்டுமென்பதுதான் இத்திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்.

(7) ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் தேர்தல்கள், அரசு அண்மையில் அறிவித்துள்ள நாட்களில் நடக்கவிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களும் விரைவில் நடத்தப்பட வேண்டுமென்று அரசு உறுதியாகக் கருதுகிறது.



(8) இம் மாநில அரசு, கல்வித் துறைக்குச் சிறப்பிடம் அளித்து வந்துள்ளது. கடந்த ஆண்டு நான் குறிப்பிட்டது போல பள்ளிக் கட்டிடங்கள் பலவற்றை மேம்படுத்தவும், ஆய்வுக் கூடங்களை வலுப்படுத்தவும், அரசு கூடுதலாக நிதி ஒதுக்கத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக ஆதி திராவிடர் பள்ளிகளுக்குத் தனி நிதி ஒதுக்கப்படும்.

(9) கடந்த ஆண்டு என்னுடைய உரையில் அறிவித்திருந்தவாறு மதுரை மாவட்டத்தை, அரசு, மதுரை மாவட்டம் என்றும், அண்ணா மாவட்டம் என்றும் இரண்டாகப் பிரித்துள்ளது. மாவட்டங்களைப் பிரித்து, அவற்றின் நிருவாக அமைப்பைச் செம்மையானதாக மாற்றக்கூடிய இத்தகைய நடவடிக்கைகளை நடப்பாண்டிலும் தொடர்ந்து செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக, திருநெல்வேலி, வட ஆர்க்காடு மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது.


(10) கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், அரசு, சில பொருட்கள் மீதான பலமுனை விற்பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றி, அதன் மூலம் விற்பனை வரி விதிப்பு அமைப்பு முறையை எளிமையானதாக ஆக்கும் பணியைத் தொடங்கி வைத்தது. இத்தகைய நடவடிக்கைகள் மேலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலமாக இம்மாநிலத்திலுள்ள விற்பனை வரி விதிப்பு அமைப்பு, பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமானதாக இருக்குமென்று நம்புகிறோம்.

34. வளமான எதிர் காலத்தை உருவாக்கும் முயற்சிகளில் இவ்வரசு ஈடுபட்டுள்ளது. இந்த உன்னத முயற்சிக்குத் தாங்கள் நல்கும் ஒத்துழைப்பு, தமிழ் நாட்டில் வருங்காலத்தில் வளங்கொழிக்க வழி வகுக்கும்.

வணக்கம்.



# எங்களுக்குத் தேவை கடும் வறட்சி



ரெ. இராவணன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்

காமராசர் மாவட்டம்

காமராசர் மாவட்டத்தில் இருக்கின்ற சிவகாசி நகரைச் சுற்றிலும் சுமார் 200க்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன.

இவைகளில் மட்டும் ஆண்-பெண், சிறுவர் என்று 2 இலட்சம் பேர் பணிபுரிகின்றனர். இதனைச் சார்ந்துள்ள துணைத் தொழில்களில் சுமார் இரண்டு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

இந்தியாவில் தயாராகும் பட்டாசுகளில் சுமார் 90 சதவீதம் சிவகாசியில்தான் உற்பத்தி ஆகிறது.

இந்த ஆண்டு மட்டும் ரூபாய் 50 கோடிக்குப் பட்டாசு தயாரித்துள்ளதாக அதன் தொழில் அதிபர்கள் கூறுகிறார்கள்.

இத்தகைய தொழில் பற்றி ஆய்வோம்:

இந்தப் பட்டாசுத் தொழிலுக்குக் கந்தகம், வெடி உப்பு, அலுமினியம் அல்லாய், அலுமினியம் சிப்ஸ், இரும்புத்தூள் மற்றும் பல்வேறு இரசாயனப் பொருள்களுடன் பேப்பர், அட்டை முதலானவை இது தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருட்கள் ஆகும்.

பட்டாசின் முக்கிய பாகமே திரிதான்! இந்தத் 'திரி' சாதாரண நூலில் இருந்துதான் தயாரிக்கப் படுகிறது. நீளமான நூலில் கரு மருந்தைத் தடவி நன்றாகக் காயவைக்கப்படும். பிறகு இதன் மீது காகிதத்தைச் சுற்றி தேவையான அளவுகளில் வெட்டி எடுக்கப்படும்.

சிறுவர் மிகவும் விரும்பி உபயோகிக்கும் வெடிக்குச் சாதாரண காகிதத்தில் குழாய்கள் தேவையான அளவில் செய்யப் படுகின்றன. முதலில் நீளமான அளவில் செய்து, அதன் அடிப் பாகம் மூடப்படுகிறது. அக்குழாய்களில் அலுமினியப்பவுடர், பச்சை உப்பு, கந்தகம், வெடி உப்பு ஆகியவற்றின் கலவையைத் தேவையான அளவு போட்டுத் திரியை மூடிவிடுவர். பிறகு பல வண்ணக் காகிதங்களில் அக்குழாயைச் சுற்றிக் காயவைப்பர். இவ்வாறு தயாராவதுதான் முழு வடிவம் பெற்ற வெடி! பூச்சரம் தொடுப்பது போல் அவற்றைப் பின்னினால் அது சரவெடி!

சின்னஞ்சிறுவர், சிறுமியர் ஆசையோடு பயன்படுத்தும் பட்டாசு வகையைச் சேர்ந்தது தான் கம்பி மத்தாப்பு.

இது தயாரிக்க அலுமினியப் பவுடர், பச்சை உப்பு, கந்தகம், செம்புக்கம்பி தேவைப்படுகின்றன மேற்கண்ட இரசாயனப்பொருள்களைத் தண்ணீரில் கலவை செய்து, அவைகளைச் சமமான மரத்தொட்டிகளில் ஊற்றுகிறார்கள். செம்பு முகாமிட்ட கம்பிகளைச் சிறிது, பெரிதாகத் தேவைக்கேற்ப வெட்டி எடுத்து, மருந்துக்கலவையில் தேவையான அளவு தோய்த்து எடுத்துக் காய வைக்கிறார்கள்.

அணுகுண்டு தயாரிப்பதில் பல வித ஆபத்துக்கள் இருப்பதால் கட்டுப்பாடுகள் அதிகம். மருந்துக் கலவையைச் சிறு அட்டைப் பெட்டியில் செலுத்திவிட்டு நன்றாகச் சணலால் இறுக்கக்கட்டுவார்கள். சணலின் இறுக்கமும் சுற்றும் கூடக்கூட அணுகுண்டின் சக்தி அதிகமாகிறது. அணுகுண்டின் திரியில் தீ வைத்ததும் மருந்துக் கலவை உள்ளே புகை வெளியே வரத்துடிக்கிறது. இறுக்கமான சணலையும் காகிதத்தையும் டமாலெனப் பிளந்து கொண்டு புகை வெளியாகிறது. இது தரும் விசைதான் அதிர்ச்சி தரும் வெடிச் சத்தம்!

சிறுவர்களுக்குப் பயன்படும் கேப், ரோல் கேப் முதலியவை சிவகாசியில் மட்டுமே தயாரிக்கப் படுபவை.

இவ்வாறு கண்மூடி, கண்திறப்பதற்குள் வெடித்துச் சிதறும் பட்டாசுகள், கண்கவரும் மத்தாப்புகள் எல்லாமே கடுமையான உழைப்பின் மூலம் உருவாக்கப்படுபவை! அவர்களின் உயர்வைப் பெற்றெடுக்கும் முத்துக்கள்தான் இவை!

என்னதான் இவர்கள் உழைத்தாலும், இவைகள் தயாரிக்கப் படும்போது மழையும், தண்ணீரும் இருத்தல் கூடாது! இவர்களை வாழவைக்கும் இந்தத் தொழிலுக்குத் தேவை கடும் வறட்சி! அது சிவகாசியில் இருப்பதால்தான் இத்தொழில் சிறக்கிறது என்றால் அது மிகையல்ல!



சட்டப் பேரவை-மேலவை கூட்டுக் கூட்டத்தில் மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் உரை நிகழ்த்துகையில்— "வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு 10 இலட்சம் வீடுகள் கட்டித் தர தமிழ்நாடு அரசு திட்டமிட்டு இருக்கிறது" என்று தெரிவித்தார்.




அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் அறக் கட்டளையின் 11-வது , கிளையைச் சென்னை மாநகரில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் துவக்கி வைத்து, அதன் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இக்கட்டடத்திற் கான 5 கிரவுண்ட் நிலத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியுள்ளார்.

# இசைப்புயல்

## குன்னக்குடி வைத்தியநாதன்

பொன்னான திருநாட்டின் பொங்கல் திருநாளாம் நன்னாளில் நாட்டில் பற்பல வண்ணங்களில் புதுமை என்னும் புரட்சி எல்லா வகையான தொழில்களிலும் காணப்படுகிற ஒருவகைப் பாங்கினை நாம் பார்க்கிறோம். அப்படி எதிலும் ஒரு புதுமையையும் புதினத்தையும் எதிர்பார்க்கும் நாம் சில விஷயங்களில் பழைய சம்பிரதாயம் என்று சொல்லி அதையே பின்பற்றி எண்ணங்களில் எழில்மயமாக உருவாகும் அற்புதக் கற்பனைகளுக்கு அணைபோட்டு அடைத்து வைப்பதையும் ஒரு வழக்கமாகக் கொண்டுள்ளோம் என்பதை நினைக்கும் சமயம் மனம் வருந்துகிறது. அந்த வகையில் இசையில் புதுமை வேண்டுமா வேண்டாமா என்பது கேள்வி அல்ல.

இன்றைய உலகில் எதிலும் ஒரு எழுச்சி வேகம் நிறைந்து ரசிக்கத்தக்க வகையில் இசை அமையவேண்டும் என்பதுதான் என் எண்ணம். சம்பிரதாயமான சங்கீதத்தையே கடைப்பிடியுங்கள், அதைக் களங்கப்படுத்த வேண்டாம் என்று சிலர் சொல்லலாம்.

அந்தக் காலத்தில் கால்நடையாகப் பக்கத்து ஊருக்குச் சென்றார்கள். சிலகாலம் கழித்து வண்டிகளில் சென்றார்கள். பிறகு சைக்கிள், பின் மோட்டார், பஸ், ரயில், கப்பல், விமானம் என்று நாளொரு வண்ணமும் நாடு முன்னேறி இன்று ராக்கெட், கம்ப்யூட்டர் உலகம் நடந்து வருகிறது. மனிதனின் சிந்தனையில் செயல்களுக்கு அளவுகோலே கிடையாது என்ற வகையில் விஞ்ஞானம் வளர்ந்து செயல்படும் நேரத்தில் கல்வியில் புதுமை, நமது நடைமுறை வாழ்க்கையில் நல்ல மாற்றம், உடைகளில் நல்ல ஏற்றமிகு வளர்ச்சி இப்படி இருக்கையில் சங்கீதம் மட்டும் 'சம்பிரதாயம்' என்ற போர்வைக்குள் முடங்கிக் கிடக்க வேண்டுமா என்ன?

போகட்டும் - அந்த சம்பிரதாயம் என்ற சடங்கைச் சிருஷ்டித்தது யார்? நம்மைப் போன்ற ஒரு மனிதன் தானே! நாம் அதையே சற்றுத் திருத்தி இன்றைய அற்புத உலகுக்கு ஏற்றவாறு புதுமை முறையில் மாற்றி ஏன் வழங்கக்கூடாது? அந்தவகையைச் சேர்ந்தவன்தான் நான்.

இசை, இறை வழிபாட்டுக்கு இன்றியமையாதது என்பது திண்ணமான எண்ணம். குழந்தை முதல் பெரியவர்கள் வரை இசையை ரசிப்பதில் இன்று சிறந்து விளங்குகிறார்கள், இசையில் புதுமையை ரசிக்கிறார்கள்.

நாதஸ்வரத்துடன் மட்டுமே இணைந்து ஒலித்த ''தவில்'' வயலினுடன் இணைந்து இசையை வழங்கியதை அற்புதமாக வரவேற்கிறார்கள். திரைப்படஇசையில் கர்நாடக இசையைச் சற்று மெல்லிசை வண்ணம் பூசி அழகு ஊட்டிக் கொடுத்தால் கை தட்டல் மூலம் களிப்பூட்டுகின்றனர். மேல்நாட்டு இசைக் கருவிகளிலும் கூட கர்நாடக இசையை ஒலிக்கச் செய்து, நம் நாட்டின் கலைஞர்கள் புகழ் சேர்க்கிறார்கள்.

பழம்பெரும் இசைக் கலைஞர்கள் கூட பழைய பாணி சம்பிரதாயம் என்று பேசிக்கொண்டு பொழுதைப் போக்கிக் கொண்டு இருப்பதைவிட்டு, இன்றைய கம்ப்யூட்டர் உலகுக்கு ஏற்றவாறு நமது இசையை எல்லாத் தரப்பட்ட மக்களும் ரசிக்கும் வகையில் எளிதாக்கி மாற்றி அமைத்து வழங்கினால் மக்கள் பாராட்டுவார்கள். மகிழ்ச்சி அடைவார்கள்.

இசை விழாக்களில் கலந்து கொண்டு, இசை வளர வேண்டும், இசையை ஆதரிக்க வேண்டும் என்று பேசினால் மட்டும் போதாது. அதில் புதுமை முறையைக் கையாண்டு புகழ்பெற ஆர்வம் காட்ட வேண்டும். இன்றைய மாணவ, மாணவிகள் இசையில் நல்ல ஆர்வமுடையவர்களாக உள்ளனர்.

நமது தமிழக அரசும் கல்விக் கூடங்களிலும் இசைக் கல்லூரிகளிலும் புதுமை இசை ஆராய்ச்சி என்று ஒரு பிரிவு ஏற்படுத்திச் செயல்படச் செய்தால் மிகவும் நலமாக இருக்கும் என்பது என் எண்ணம்.

கர்நாடக இசை கர்நாடக இசை என்று அதற்கு ஒரு பழைய போர்வையைப் போட்டு மூடி வைக்காமல், இன்றைய அதிசய உலகத்துக்கேற்றவாறு செந்தமிழ் நாட்டின் செல்வத் திருவிழாவாம் செல்லத் திருவிழா பொங்கல் திருவிழாவாம்இன்று முதல் கரும்பு நிறை சுவைமிகுந்த கர்நாடக இசை என்னும் புதையலை எடுத்துப் புதினம் கலந்து புலமைமிக்கவர்களால் ஆராய்ந்து பார்த்து புரட்சிமிக்கதொரு நல்ல இசையை நாட்டுக்குத் தந்து எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று நாதமயமான வேதம் ஓதி 'தமிழ் இசை' சிறந்து மேம்பாடடைய வரம் தர எல்லாம் வல்ல முருகனை வேண்டுகிறேன்.



# மகிழ்ச்சி பொங்கட்டும்

## — சிலம்பொலி செல்லப்பன்

சித்திரை முதல் பங்குனி ஈறாய் உள்ள பன்னிரண்டு திங்களுள் தைத்திங்கள் தனிச் சிறப்பு வாய்ந்ததாய் விளங்குகிறது. தமிழ் மக்களின் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் ஈடேற்றி வைப்பதில் தைத் திங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழ்ப் பழமொழி. வீட்டுத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளுதல், திருமணம் முதலிய நன்னிகழ்ச்சிகளை நடத்துதல், பணத்தட்டுப்பாடின்றி மகிழ்ச்சியாய்ப் பொழுதைக் கழித்தல், தொழில் தொடங்குதல் முதலிய சிறப்புகள் கைகூடப் பிற திங்கள்களைவிடத் தைத் திங்களையே பெரிதும் நம்பினர் தமிழ் மக்கள், அதற்குக் காரணமும் உண்டு!

இந்தியா வேளாண்மை நாடு; ஏறக்குறைய இந்தியாவின் 85 சதவிகிதம் ஊர்ப் புறங்களாகவும் அவற்றில் வேளாண்மையே இன்றியமையாத் தொழிலாகவும் உள்ளதை நாமறிவோம். பழந்தமிழகத்தில் உழவுத் தொழிலே உயர் தொழிலாகக் கருதப்பட்டது; உலகத்துக்கெல்லாம் உணவளிக்கும் உயிர்த்தொழிலாகவும் அது விளங்கியது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராகப்' போற்றப்பட்டனர். 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்றார் வள்ளுவர்;

''சுழன்றும் ஏர்ப்பின்ன(து)
உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''—
என்றும்

''உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''
என்றும்

பாடி, உழவுத் தொழிலையும், உழவர் பெருமக்களையும் அவர் சிறப்பித்துப் பெருமையளித்தார். உலகில் பிற எத்தொழில் செய்பவர்க்கும் அவர் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருளை ஆக்கிக் கொடுப்பது உழவுத் தொழிலே ஆதலால் அதுவே தலைசிறந்த தொழில் என்றார் திருவள்ளுவர். ஆடித் திங்களில் தேடி விதைத்தது, ஒன்று நூறாய்ப் பெருகி விளைவு தருவதும், இரவு பகல் பாராது பாடுபட்டதற்கு வரவைப் பெறுவதும் தைத் திங்களில்தான். எனவேதான் தமிழ் மக்கள் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று நம்பினர்; தை மகளை மகிழ்ச்சியோடு வரவேற்றனர் — வரவேற்கின்றனர்.

தைத் திங்களில் தமக்குப் பெருவளம் சுரந்திருப்பதற்குத் துணை நின்றவற்றை எண்ணிப் பார்க்கின்றனர் உழவர்கள்: ''ஏருழுதோம்; நாற்றுவிட்டோம் நடவு செய்தோம்; களையெடுத்தோம்; நீர் பாய்ச்சினோம்; உரமிட்டோம்; பயிர் வளர்த்தோம்; இப்போது பயனடைந்தோம். இந்தப் பயன் முழுக்க முழுக்க நம்மாலேயே விளைந்தது'' என்று தற்செருக்குக் கொள்வதில்லை அவர்கள்.

''நாம் கடனை வாங்கிப் பயிர் செய்ததும் உண்மைதான்; பசி, பட்டினி பாராது உழைத்ததும் உண்மைதான்; இரவு பகல் வேறுபாடின்றிக் கண் விழித்துக் காத்ததும் உண்மைதான். ஆனாலும் இவைகளால் மட்டும் நமக்கு இன்று இந்தப் பயன் கிட்டிவிடவில்லை. நாம் விதைத்த விதையும், நட்ட பயிரும், உழைத்த உழைப்பும் வீணாகாதவாறு நமக்கு மழை பேருதவி புரிந்திருக்கிறது; மழையைத் தரவும், பயிர்கள் செழிக்கவும் கதிரவன் உற்ற துணை புரிந்திருக்கிறான்; உழவு மாடுகள் வஞ்சனையின்றி ஓயாது உழைத்திருக்கின்றன.



இந்தப் பேருதவிகளினாலேயே இப்பெருவளம் நமக்குக் கிட்டியிருக்கிறது'' என்பதையும் அவர்கள் மறவாது நினைவுகூர்கின்றனர். கண்கள் நன்றிப் பெருக்கால் மகிழ்ச்சிக் கண்ணீரைச் சொரிகின்றன; உள்ளமோ துணையாயினவற்றின் பெருந்தன்மையைப் போற்றிப் புகழுகிறது; அவற்றிற்கு நன்றிக்கடன் செலுத்த முற்படுகிறது. இந்து நன்றிக்கடன் செலுத்தும் திருநாளே 'தைப் பொங்கல்' திருநாளாம்.

பொதுவாகப் பொங்கல் விழா நான்கு நாட்கள் நடைபெறுகின்றது. மார்கழித் திங்கள் கடைசி நாள் போகிப் பண்டிகையும், தைத் திங்கள் முதல் நாள் சூரியன் பொங்கலும், இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலும், மூன்றாம் நாள் கன்னிப் பொங்கலும் கொண்டாடப்படுகிறது. முதல் திருநாளாகிய போகிப் பண்டிகையன்று வீடுகளை ஒட்டடையடித்து, வண்ணம் பூசி, தேவையற்ற பழைய பொருள்களைப் போக்கித் தூய்மைப்படுத்தும் செயல் நடைபெறுகிறது. பழைய பொருள்களையும், மாசுகளையும் போக்குவதால் 'போக்கிப் பண்டிகை' என்றழைக்கப்பட்டது, நாளடைவில் 'போகி' யாயிற்று. 'போகி' என்பது இந்திரனுக்கும் உரிய பெயர். இந்திரன் மருத நிலத்திற்குரிய கடவுளாகக் கூறப்படுகிறான்.

''மாயோன் மேய காடுறை
உலகமும்
சேயோன் மேய மைவரை
யுலகமும்
வேந்தன் மேய தீம்புனல்
உலகமும்
வருணன் மேய பெருமணல்
உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம்
நெய்தலென்று
சொல்லிய முறையால் சொல்லவும்
படுமே''

என்ற நூற்பாவில் 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்' என்ற அடியின் வாயிலாக மருத நிலத்திற்குரிய கடவுள் இந்திரன் என்று தொல்காப்பியரே குறிப்பிடக் காண்கிறோம். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமாம். எனவே உழவர்கட்கு மழையே கடவுளாம்.

போகம் என்னும் சொல் விளைச்சலைக் குறிக்கும். ஒரு போகம், இரு போகம் என்று உழவர்கள் சொல்லுவதிலிருந்து இதையறியலாம். மருத நிலத்திற்குத் தெய்வமாயிருந்து-மழை

யாய்ப் பொழிந்து-போகத்தைக் கொடுப்பதால் மழைக் கடவுளை 'போகி' என்று உழவர்கள் அழைத்தனர் போலும்! எனவே 'போகிப் பண்டிகை' என்பது உழவர்கள், தம் நிலத் தெய்வமாகிய மழைக்கு (போகிக்கு) நன்றிக்கடன் செலுத்தும் திருநாளாகும் என்றும் சொல்லலாம். மழையைப் போற்றிப் பாராட்டுவதும், மழைக் கடவுளாகிய இந்திரனை வழிபடுவதும் பண்டைக் காலத்திலேயே இருந்துள்ளது என்பதைச் சிலப்பதிகாரம் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறது. சிலப்பதிகாரத் தொடக்கத்திலேயே கடவுள் வாழ்த்துக்குப் பதிலாக இளங்கோ அடிகள், 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என மழையைச் சிறப்பித்து வணங்குகிறார். அம்மழையைத் தரும் கடவுளாகக் கருதப்படும் இந்திரனுக்குப் புகார் நகரில் 21 நாட்கள் இனியதொரு விழா எடுக்கும் செய்தியும், அது இந்திர விழா என்றே அழைக்கப்படுவதையும் இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் தெளிவாகக் காட்டுகிறார். இதற்கென ஒரு தனிக் காதையே சிலம்பில் இடம் பெற்றுள்ளது. எனவே போகிப் பண்டிகையை உழவர் பெருமக்கள் மழைக்கு - மழைக் கடவுளுக்கு - போகிக்கு நன்றி செலுத்தும் திருநாள் என்று சொல்வதும் பொருத்தமுடைத்தே. வயல்வளம் சுரந்ததும் மகிழ்ந்த உழவர்கள், தம்முடைய விளைச்சலுக்குக் காரணமாயிருந்த மழைக்கு நன்றி செலுத்த நினைப்பது இயல்பேயாம்.

இந்த அடிப்படையில் மழைக்கும், அம்மழை தந்துதவும் தெய்வமாகிய இந்திரனுக்கும் புதுப் பானையில் .புத்தரிசிப் பொங்கலிட்டு நன்றி செலுத்தும் வழக்கம் முன்பு இருந்திருத்தல் வேண்டும் என்றும் கருதலாம். மார்கழித் திங்களின் கடைசி நாளாகப் போகிப் பண்டிகை வருவதாலும், மார்கழி மாதத்தே பாவை நோன்பு நோற்கும் கன்னிப்பெண்கள்கூட

. . . . . .

''மூடநெய் பெய்து முழங்கை வழியாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்''


என்று ஆண்டாள் பாடலைப் பாடுவதன் வாயிலாக, மார்கழித் திங்களில் பொங்கல் படைத்து உண்பது சிறப்புடைத்து என்று தெரிவதாலும், பெரும்பொங்கல், மாட்டுப் பொங்கல், கன்னிப் பொங்கலில் எல்லாம் பொங்கல் படைக்கும் நிகழ்ச்சி இன்றும் நடைபெறுவதாலும் முதல் நாள் விழாவாகிய போகிப் பண்டிகையிலும் மழைக்கு நன்றியோடு பொங்கல் படைத்து மகிழும் பழக்கம் இருந்திருக்கலாம் என்றும் கொள்வதில் தவறில்லை.

அடுத்து, உழவர்கள் தம்முடைய பயிர் வளர ஒளிகொடுத்துதவிய கதிரவனுக்குப் பொங்கலிட்டுப் படைத்து நன்றி செலுத்துகின்றனர். இது 'பெரும்பொங்கல்' என்று தை முதல் நாள் கொண்டாடப்படுகிறது. ஊர்ப்புறங்களில் இதனை 'வாசற் பொங்கல்' என்பர். வீட்டு வாயிலில் சூரியன் எழும் நேரத்தில் இப்பொங்கல் இடுவதை இன்றும் காணலாம். இதேபோல உழவுக்கும் தொழிலுக்கும் உறுதுணையாயிருந்த மாடுகளுக்குப் பொங்கவிட்டுப் பெருமைப்படுத்தும் திருநாள் 'மாட்டுப் பொங்கல்' என்று தை இரண்டாம் நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. 'இவன் என்ன மாடா, மனிதனா? என்ற கேள்வியில் நிலை குறைத்துப் பேசப்படும் இழிநிலையைப் போக்கி இந்த மாடு இருந்தால் தான் மனிதனும் வாழ முடியும் என்று மாட்டினை நன்றியோடு நினைத்துப் பார்த்து அதற்குப் பெருமை சேர்க்கிறது 'மாட்டுப் பொங்கல்' திருநாள். உழவர்கட்கு மாடுகளே உற்ற செல்வம்; அதனாற்றான் மாடு என்பதற்குச் செல்வம் என்ற பொருளும் ஏற்பட்டது.

தைத் திருநாள் மூன்றாம் நாள் கன்னிப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. இது, காணும் பொங்கல் என்றும், .கன்றுப் பொங்கல் என்றும் பல பெயர்களில் வழங்கப்படுகிறது. எனினும் இது கன்னிப் பொங்கலாகவே இருக்கலாம் எனத் தோன்றுகிறது. ஆறுகளைப் பெண்களாகவே மதித்துப் போற்றுவது மரபு. கங்கையையும், .. காவிரியையும், வைகையையும் கன்னிப் பெண்களாகவே புலவர்கள் போற்றிப் பாடியுள்ளனர்.

''திங்கள் மாலை வெண்குடையான்
சென்னிசெங்கோல் அது ஓச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி.....''

எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் தங்கையையும் காவிரியையும் பெண்ணாகவே உருவகித்துப் பாடியிருப்பதை அறிகிறோம். 'கன்னி' என்னும் சொல் ஆற்றைக் குறிப்பதாய்க் கொண்டால் மழைக்கும், கதிரவனுக்கும், மாட்டிற்கும் நன்றி செலுத்திய உழவர்கள், வயல் வளத்தைத் தன் நீர் நலத்தால் செழிக்கச் செய்த ஆற்றிற்குப் பொங்கலிட்டு வணங்கி நன்றி செலுத்திய திருநாளே கன்னிப் பொங்கலாயிற்று





எனலாம். ஆறு கன்னியாக—பெண்ணாக இருப்பதால் உழவர் வீட்டுக் கன்னிப் பெண்களே அன்று பொங்கலிட்டு ஆற்றங்கரை சென்று படைத்து, வழிபட்டு வருவதை ஊர்ப்புறங்களில் இன்றும் காண முடிகிறது. எனவே தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள், தொழில் அடிப்படையில் ஒரு 'நன்றித் திருநாளாகவே' மலர்ந்திருக்கிறது என்பது தெரிகிறது.

கொங்கு நாட்டு ஊர்ப்புறங்களில் மார்கழி இறுதிநாள் 'காப்புக் கட்டு' எனவும், தை முதல், இரண்டாம் நாட்கள் முறையே சூரியன் பொங்கல், மாட்டுப் பொங்கல் எனவும் கொண்டாடப்பட்டு வருகிறது. எடுத்த பணி இனிதே நிறைவேறும் பொருட்டு நூலின் தொடக்கத்தில் செய்யும் இறை வணக்கப் பாடல் காப்புச் செய்யுள் எனப்படும். கோயிலில் திருவிழாத் தொடங்குவதை அறிவிக்கும் செயலைக் காப்புக்கட்டுதல் என்பர். பொங்கல் விழாவில் காப்புக் கட்டுதல் என்பது இன்ப வாழ்வு இனித் தொடங்கவிருக்கிறது என்பதை அறிவிக்கும் செயலாம். அன்று, வேப்பிலைக் கொத்து - பூளைப்பு-ஆவிரை மலர் ஆகியவற்றை இணைத்து, வீட்டுக் கூரைகளிலும் மாட்டுத் தொழுவங்களிலும் மற்றும் முக்கிய இடங்களிலும் செருகுவர். வேப்பிலை, நோய் நீக்குவது; பூளைப் பூ, தூய்மையைக் காட்டுவது; ஆவிரை மலரின் மஞ்சளோ பொன்னை-செல்வ வளத்தைச் சுட்டுவது. இன்பத்துக்குக் காப்பு செய்யும் அதே வேளையில், வருமாண்டில் வாழ்வு, நோய் நொடியற்றதாய், தூய்மைப் பொலிவுடன், செல்வம் கொழிப்பதாய்த் துலங்க வேண்டுமெனும் நோக்கமே காப்புக் கட்டுதலின் பொருளாம் என்பது தெளிவாகிறது. சூரியன் பொங்கல், வீட்டு வாசலில் வைக்கப்படுகின்றது; சூரியன் எழும் வேளையில் பொங்கல் பொங்கி வரத்தக்க நிலையில் அப்பொங்கல் நிகழும். மாட்டுப் பொங்கல் மாடுகள் இருக்கின்ற வயல் வெளியில்வைக்கப்படுகின்றது. அன்று மாடுகளைக் குளிப்பாட்டித் தூய்மை செய்து கொம்புக்கட்கு வண்ணம் பூசுவர். பொங்கல் பொங்கியதும் படையல்களிட்டு, முதற் படையலை மாடுகட்குக் கொடுத்து உண்ணச் செய்வர்; பின்னரே மக்கள் உண்பர். மாடுகளை மேய்ப்பவர் அன்று பொங்கல் பொங்குவதன் முன்னர் எதையும் உண்ண மாட்டார். மாடுகள் படையலை உண்டதும், அடுத்த படையலை அவற்றை மேய்ப்பவர்க்கு அளிப்பர்; அதன் பின்னரே பிறர் உண்பர். விளைவுப் பொருளை அதன் விளைவுக்கு உற்ற துணையான மாடுகள் உண்ட பின்னரே மனிதன் உண்ணும் வழக்கத்தை-உயர்வை இந்நிகழ்ச்சி சுட்டுகிறது.

தென்பாண்டி நாட்டில் மாட்டுப் பொங்கலையடுத்துவரும் நாளில் 'மஞ்சு விரட்டு' நடைபெற்று வருகிறது. மாடுகளும் மனிதர்களும் பங்கு கொள்ளுகின்ற வீர விளையாட்டிது. இவற்றை ஒன்றிணைத்துப் பார்க்கும்போது இன்பத்தை வரவேற்று, உலக வாழ்க்கைக்கு உதவுகின்ற ஞாயிற்றினைப் போற்றி, தொழிலுக்குத் துணை நிற்கும் மாடுகட்கு நன்றி தெரிவித்து, அம்மாடுகளுடன் வீரம் விளைத்து மகிழ்தலே பொங்கல் விழா என்பது புலனாகிறது.


"தமிழர்கள் சமயத்தின்பேரால் மதத்தின் பேரால் எண்ணற்ற விழாக்களைக் கொண்டாடிப் பழக்கப்பட்டுப்போய் விட்டனர். சித்திரைக்குப் பௌர்ணமி வைகாசிக்குக் கருட சேவை, ஆனிக்கு மஞ்சனம், ஆடிக்குப் பதினெட்டு, ஆவணிக்கு அவிட்டம், புரட்டாசிக்குச் சனிக்கிழமை, ஐப்பசிக்குத் தீபாவளி, கார்த்திகைக்குத் தீபம், மார்கழிக்குத் திருவாதிரை, தைக்குப் பூசம், மாசிக்கு மகம், பங்குனிக்கு உத்திரம்.....என எந்த மாதத்தையும் விட்டு வைக்கவில்லை. ஏன், எந்த நாளையும்கூட விட்டு வைக்கவில்லை எனலாம். இவையெல்லாம் பொருளற்ற - ஏன், எதற்கு? என்ற வினாக்களுக்குப் பொருத்தமுற விடையளிக்க முடியாத விழாக்களாவன. ஆனால் மே நாளோ, உண்மைப் பொருளுடைய உயிர்ப் பொருளுடைய திருநாளாகும்; உழைப்பை உலகம் மதிக்கிறது-போற்றுகிறது என்பதைத் தெரிவிக்கும் பெருநாளாகும்" எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள், 'மே நாள்' பற்றி ஒருமுறை தமக்கேயுரிய அழகுத்தமிழில்-அருவிப் பேச்சில் தெரிவித்தார்கள். உழைப்பை மதிக்க 'மே' இருப்பது போல உழவை மதிக்கத் 'தை' விளங்குகிறது. 'மே'-'தை' விழாக்களே மேதைகள் போற்றுகின்ற விழாக்களாதலின்;

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்

என்று பாடியுள்ளார் பாரதியார். உழவுக்குப் பெருமை சேர்க்கும் இத்திருநாளில்,

''பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க''

மாநிலம் செழிப்பதாகுக என்னும் எண்ணம் மலரட்டும்: மகிழ்ச்சி பொங்கட்டும்: ●



# நன்மங்கலம் செழிக்க...

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

நாதசுர இசையை மங்கல இசை என்பார்கள். பருப்பில்லாமல் கூட கல்யாணம் நடக்கலாம். ஆனால் நாதசுர இசை முழங்காமல் இல்லங்களில் சுப காரியங்கள் நடப்பதில்லை. இறைவன் ஆலயங்களிலோ அபிஷேகம் ஆராதனை தொடங்கி திருவீதி புறப்பாடு வரை எப்போதும் எல்லாச் சமயங்களிலும் ஏகச் சக்ராதிபதியாக இடம் பெற்றிருப்பது நாதசுர இசை எனும் இந்த நல்லிசைதான்.

பொதுவாக கோவில்களில் உற்சவக் காலங்களில் சுவாமி புறப்பாடு முன்னிரவில் தொடங்கி மாடவீதிகளில் சுற்றி கோவிலுக்குள் வரவர பின்னிரவு வெகு நேரம் ஆகிவிடும். பஞ்சபிரகாரம் போன்ற சமயங்களில் பொழுது விடிந்து கூட விடும். நேரம் ஆக ஆக இரவின் ஆழ்ந்த அமைதியில் இந்த இசை கேட்போருக்கு ஒரு தேவ சுகத்தையே கொடுக்கும். காற்றில் தவழ்ந்துவரும் இசை அலைகள், 'மைல்' கணக்கில் பரவி, மக்களை மணிக்கணக்கில் மகுடி முன் பாம்பாக மயங்கிக் கிறங்க வைக்கும். கேட்போருக்கு மட்டுமின்றி வாசிப்போருக்கும் கூட உள்ளத்திலே ஒரு சுகானுபவம் ஊற்றெடுக்க வைக்கிற சக்தி இந்த நாயன இசைக்கே உண்டு. ஒலியும் ஓசையும் ஒருமித்துச் சங்கமிக்கும் தேவகானம் இது.

இசையும் கூத்தையும் இரு கண் எனப் போற்றிய பழந் தமிழர் இசைக்கு ஆதாரமான இசைக் கருவிகளை தோல் கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி என்று மூன்றாகப் பிரித்தனர். இந்த மூன்றில் முதல் இடம் வகிக்கும் தோல் கருவி தவில். இதற்கு அடுத்த இடம் வகிக்கும் துளைக் கருவி நாதசுரம். இந்த இரண்டின் இணக்கம் இசைத் தேன் மழை!

ஓசை ஒலி எலாம் ஆனவன்' என்று அடியவர்கள் _இறைவனைப் பாடிப்பரவுகின்றனர். ஆண்டவனே நாதவடிவமாக இருக்கிறான் என்பர் நாவுக்கரசரும், அருணகிரியாரும். நாபியில் இருந்து கிளம்பி நாதக்குழல் துளை வழியாக நாத ஓசையாய் வெளிப்படும் இசையும், தவிலில் இருந்து கிளம்பும் ஒலியும் ஒருங்கிணைந்துவிடுகிறபோது அது வெறும் ஓசையும் ஒலியுமாக இருப்பதில்லை. வேதமந்திர கோஷமாகவே ஆகிவிடுகிறது. எனவே தான் இந்த இசைக்கு ஆலயங்களில் முதல் இடமும் முக்கிய இடமும் தரப்படுகிறது.

இந்த இசையில் கொடிகட்டிப் பறந்தவர், நாதசுரச் சக்ரவர்த்தி என்று நாடே போற்றிய திருவாவடுதுறைதிரு.டி.என்.இராசரத்தினம்பிள்ளை அவர்கள்தான் இந்த இசைக்கு மக்கள் மத்தியிலே அரியாசனமும் இந்த இசைக் கலைஞர்களுக்குச் சமூகத்தில் சரியாசனமும் கிடைக்கச் செய்த பெருமைக்குரியவர். இவருக்கு முன் இருந்த நிலைமை வேறு. பிள்ளையவர்களுக்குப் பின்னே காருகுறிச்சியார் இந்த இசைக்கு மேலும் பெருமை தேடித் தந்தார்.

புரட்சித் தலைவர் ஆட்சியிலே இந்த இசைக்கு அரசியல் அங்கீகாரமும் ஆஸ்தான அங்கீகாரமுமே கிடைத்திருக்கிறது. இது ஒரு பொற்காலம். புது முன்னேற்றம். புகழத்தக்க சாதனை. இவ்வளவு பெருமையும், புகழும் மிக்க இந்த இசையின் எதிர்காலம் என்ன? இதையே நம்பி இருப்பவர்கள் நிலைமை என்ன என்பதை எண்ணிப்பார்க்கிற போது மனம் ஒரு கணம் துணுக்குறவே செய்கிறது.

நம் நாட்டைவிட மேலைநாடுகளில்-குறிப்பாக நான் அண்மையில் சென்றுவந்த அமெரிக்கா பிரான்ஸ் போன்ற நாடுகளில் இந்த நாதசுர இசையை ரசிப்பவர்கள் மட்டுமல்ல இந்த இசைக் கருவியின் அமைப்பை, நுணுக்கத்தை, தவுல் வாத்தியத்தின் தனித் தன்மையைப் பற்றி விரிவாக அறிந்து கொள்ள அநேகர் ஆர்வம் காட்டுகின்றனர். நம்மவர்களைவிட அவர்கள் இதில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருப்பதைக் காணும் போது இந்த இசையின் மகோன்னதத்தை நினைத்து மனம் புளகிக்கவே தோணுகிறது. என்றாலும் இங்கே நமது நாட்டில் இதையே முழுமையாக நம்பி வாழமுடியாத நிலை இன்றும் இருப்பது வருந்தக் கூடியதாகவே உள்ளது.

நாதசுரக்கலைஞர்களுக்குச் சமுதாயத்தில் உயர்ந்த இடமும் அந்தக் கலைக்கு ஒரு மேடைப் பெருமையும் கிடைத்திருக்கிறது என்றாலும் புதியதாக இளைஞர்கள் இந்த இசையையே நம்பி முழுநேரக்கலைஞர்களாகவிளங்குகிற தன்மை வேகமாக உருவாகவில்லை. இந்த இரு வாத்தியங்களிலும் பயின்று தேர்வது கொஞ்சம் சிரமமானது என்ற விஷயம்,இதற்கு ஒரு காரணமாக இருந்தாலும் இதையே வாழ்க்கைக்கு உகந்த உதவக் கூடிய கலையாக ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் அதிகம் பேர் இன்னும் முன்வரவில்லை.

சித்திரமும் கைப்பழக்கம் என்பது போலப் பழகப் பழகத்தான்-தொடர்ந்த இடைவிடாத பயிற்சி மூலம் மட்டுமே பரிமளிக்கக்கூடிய கலை இது. எனவே ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சி எளிதாகவும் சுலபமாகவும் கிடைக்க வழி செய்யப்படவேண்டும். அல்லாமலும் இந்தக் கலையையே தொழிலாகக் கொள்ளுபவர்களின் எதிர்கால வாழ்வுக்கும் சமூகத்தில் உத்தரவாதம் வேண்டும். இந்த இரண்டும் தடையின்றிக் கிடைக்குமானால் இந்த இசைமேலும் சிறக்கவும் செழிக்கவும் வாய்ப்பு உண்டு.

தமிழர் தனித்தன்மையையும்-திறமையை விளக்கும் கலையும் இதுவே.

தமிழர்தம் நல்மங்கலம். புரட்சித்தலைவர் காலத்திலேயே மங்கல இசையாம் நாதசுர இசை மேலும் செழிக்கவும் சிறக்கவும் வழிகாணப்பட வேண்டும் என்பதே என் ஆசை. இளைஞர்கள் இதனைப் பயில அதிக அளவில் ஆர்வம் காட்ட வழிசெய்ய வேண்டும். தேவைப்படும் உதவிகளும் வசதிகளும் அவர்களுக்குச் செய்து தரப்படவேண்டும். மக்கள் இசையின் மங்கலம் சிறக்க மக்கள் திலகம் மனம் வைத்தால் தமிழர் கலாச்சாரம்-பாரம்பரியப் பெருமை பாரெல்லாம் அறியும். நல்மங்கலம் நாடெல்லாம் ஒளிரும். ●

# கலை மக்களுக்காகவே!

கலை என்றால் என்ன? ''ஒருவன் தான் அனுபவித்துணர்ந்த உணர்ச்சி பாவங்களை மற்றவர்களும் அனுபவித்துணரும்படிச் செய்வது கலை'' என்று கலைக்கு விளக்கம் கொடுக்கிறார் ரஷ்ய இலக்கிய மேதை லியோ டால்ஸ்டாய்.

புத்தகங்களைப் படிக்கும்போது திருப்தியடைகிறோம். ஓவியங்களைப் பார்க்கும்போது மகிழ்ச்சியடைகிறோம். சிற்பங்களைப் பார்க்கும்போது உணர்ச்சி வசப்படுகிறோம். வாத்திய இசைகளைக் கேட்கும்போது மயக்கம் கொள்ளுகிறோம். இந்த உணர்ச்சிகள் அனைத்தும் வெளிப்படுவதற்குள்ள வாய்ப்பு, திரைப்படம் பார்க்கும்போது நமக்குக் கிடைக்கிறது.

இவை திரைப்படத்தில் முழுமையுடன் வெளிவர வேண்டுமென்றால், முதலாவதாக ''சினிமா வெறும் பொழுதுபோக்குச்சாதனம் மட்டுமே'' என்றுள்ள ஏமாற்று எண்ணம் திரைப்படக் கலைஞனிடமிருந்து மறைய வேண்டும்!

இளங்கோவோ - வள்ளுவரோ-பாரதியோ-பொழுதுபோக்குக்காக எழுத ஆரம்பித்திருப்பார்களேயானால், அவர்களிடமிருந்து அழியாத இலக்கியங்கள் தமிழனுக்குக் கிடைத்திருக்க முடியாது. ரவிவர்மாவிடமிருந்து வண்ண ஓவியங்கள்தான் வெளிப்பட்டிருக்குமா? மகாபலிபுரத்துச் சிற்பங்கள்தான் உருப்பெற்றிருக்குமா?

திரைப்படம் ஓர் சிறந்த கலைப்படைப்பு; உணர்ச்சி பாவங்களை வெளியிடச் செய்து, அதையும் இந்த அளவுக்கு உயர்த்தி வைக்க முடியும் என்றுள்ள நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

அடுத்தது, கலை கலைக்காக என்றுள்ள எண்ணம் மறைந்து, கலை மக்களுக்காக, மக்களின் அறிவு வளர்ச்சிக்காக, அவர்களது வாழ்க்கைத்தரம் உயர ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்ற உணர்வு திரைப்படம் ஆக்குவோனின் உள்ளத்தில் உரம் பெற வேண்டும்.


மக்களுக்குத் தேவையான விஷயங்களைச் சொல்லுவதற்காகப் புத்தகங்கள் ஏற்பட்டிருப்பது போல, நாவல் நாடக இலக்கியங்கள் உருவாக்கப்பட்டிருப்பதுபோல திரைப்படத்திலும், இவைகளை வெளிப்படுத்த முடியும் என்பதை மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். கதையிலுள்ள சம்பவங்கள் மக்கள் வாழ்வு செம்மையுற, முன்னேற, நாகரீகமடையத் தூண்டும் வண்ணம் அமைந்திருக்க வேண்டும்.

சிற்பிக்குக் கல்லும் உளியும் இருப்பது போல, சித்திரக்காரனுக்குச் சுவரும் எழுதுகோலும் இருப்பது போல, திரைப்படமாக்குவோனுக்கு ஒளியும் காமிராவும் இருக்கின்றன.

இப்படி எல்லாக் கலைகளுக்குமே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூன்று நான்கு பொருட்கள் தேவைப்படுகின்றன.

கல்-உளி, சுவர்-எழுதுகோல் ஆகிய இந்த இரண்டு பொருட்களின் நெருக்கத்தைப் பொறுத்து, அதாவது இவற்றின் தன்மைகள்

ஆ.காசிலிங்கம்



சிறப்புறத் தொழில் படுவதைப் பொறுத்தே சிற்பமும் சித்திரமும் போற்றும்படி அமைய முடிகிறது.

எப்படிக் கல் இருந்தாலும், உளி இல்லாது சிற்பக்கலை உருவாகாதோ?.....எப்படி சுவர் இருந்தாலும் தூரிகை இல்லாது ஓவியக் கலை உருவாகாதோ?.... அதுபோலத் திரைக் கதை என்ற ஒளி இருந்தும் காமிரா இல்லாது திரைப்படம் உருவாகாது. இருந்தும் கலை களின் மேன்மை, அவற்றினது பொருட்களின் சிறப்பில்தான் இருக்கிறதேயொழிய உதவி புரியும் கருவியில் அல்ல.

இதிலிருந்து, மக்களிடையே நல்ல பல முன்னேற்றக் கருத்துக்களைப் பரப்பவும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை வளம் பெறும் வழி முறைகளை எடுத்துச் சொல்ல வும், அவர்கள் அவற்றை எளிதில் புரிந்து கொண்டு செயல்படுமாறு ஊக்குவிக்கவும், சிறந்த கருவியாகத் திரைப்படம் பயன்படும் என்பது தெள்ளத் தெளிந்த உண்மையாகும்.

தமிழ்த் திரைப்படத்தில், ஆரம்ப காலங் களில் இவைகளைப் புகுத்தியவர் கலைவாணர் திரு என். எஸ். கே. அவர்கள் ஆவார்கள். கல்லடியையும் சொல்லடியையும் பொருட் படுத்தாது, உளுத்துப் போன பழமைகளைச் சாடிவந்த தந்தை பெரியாரே வியந்து போற் றும் வண்ணம் அமைந்திருந்தது, கலைவாண ரின் அன்றைய திரையுலக பவனி-மக்களைச் சிரிக்க வைத்தே சிந்திக்க வைத்துவிட்டவர் அவர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் திரைப் படத் துறையில் நுழைந்த பிறகுதான் திரைப் படக்கலை வலிவும் வனப்பும் பெற்றுநிமிர்ந்து நடை போட ஆரம்பித்தது. கருத்தாழமிக்க அவரது அழகுத் தமிழ்,மக்களைக் கவர்ந்தது. மாபெரும் வெற்றியும் கண்டார் அவர்.


அண்ணாவின் வழிவந்த, அவரது வாரி சாக அவரது அடிச்சுவட்டை அப்படியே பின் பற்றிவரும் நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் திரைப்படங் களின் மூலமாகப் பட்டி தொட்டிகளிலுள்ள பாமர மக்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பினார். உலாவந்த அவரது படங்களி லுள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் இன்றும் மக்கள் மனதில் அப்படியே பதிந்து நிலைத்து நின்றுவிட்டன.

'நாடோடி மன்னன்' படத்திலுள்ள ''தூங்காதே தம்பி தூங்காதே'' என்ற பாடலையும் அதிலுள்ள அறிவுரைகளையும் யார்தான் மறக்க முடியும்?

ஏன்?...''சின்னப்பயலே, சின்னப்பயலே! சேதிகேளடா!'' என்றழைத்துப் பாடிய பாடல் வரிகள் எத்தனை இலட்சம் உள்ளங்களை சிந்திக்க வைத்திருக்கும் என்று நினைக் கிறீர்கள்?

கலை கலைக்காக என்பது வறட்டு வேதாந்தம்!

கலைகலைக்காக அல்ல, கலை மக்களுக் காக, மக்களின் முன்னேற்றத்துக்காக என்பது தான் நல்ல பல அறிஞர்கள் கண்ட முடிவு!




கற்றவர்கள் வியக்கின்ற
தனித்தமிழ் மாமேதை!

கலையுலகில் எழுத்துலகில்
தனிப்பாதை கண்டோன்!....

வாய்இனிக்கச் சுவைகுன்றாச்
சொல்லாளன் அண்ணா!

—கவிஞரேறு வாணிதாசன்

# காளையை வென்ற காளை



புலவர் தமிழ்ப்பித்தன்

முத்திருளர் அத்தியூரின் மூத்த பண்ணை
மொய்குழலாள் பூவாத்தாள் அவரின் செல்வி
முத்தமிழின் இசைபோன்றே முழங்கும் சொல்லி
முகமெல்லாம் மலர்போலும் வண்ண மேனி
பித்துதரும் திறமுடையாள்; காண்போர் கண்ணில்
பெருவியப்பே உருவாக்கும் அழகுக் கன்னி
சித்திரித்த சித்திரம்போல் விளங்கும் சிட்டு
செகத்தையெலாம் மயக்குமவள் நெற்றிப் பொட்டு!

பூவாத்தாள் உடன்பிறப்பு மூக்கன் என்பான்
போக்கிரிதான்; ஊருக்கவன் அடங்காப் பிள்ளை
தாவாரப் பகுதியிலே நின்ற வாறே
சத்தத்தை அவளெழுப்பி அழைக்கும் போதில்
தாவியவன் வந்திடுவான் கொம்பை ஆட்டி!
திகைக்காதீர் பூவாத்தாள் உடன்பி றப்பு
காவிநிறம் பெற்றிருக்கும் முரட்டுக் காளை
பண்ணையார்க்கு அவன்தானாம் வளர்ப்புப் பிள்ளை!


காளையினை அடக்குகின்ற வீர னையே
கரம்பிடிப்பாள் மகள்என்று பண்ணை சொன்ன
வேளையது தவறுடைத்தோ! வினையோ! பெற்ற
பெண்ணுக்கே அவர்விளைத்த தீமை தானோ?
ஆளெவரும் காளைதனை அடக்கு தற்கே
ஆர்த்துலரல் இல்லையெனும் நிலையை எண்ணி
நாளெல்லாம் வருந்துகின்றார் மூத்த பண்ணை
நன்மகளின் விம்மலுக்கோ எல்லை இல்லை!

தைத்திங்கள் பிறந்ததனால் அத்தி யூர்தான்
தனிப்பொலிவு பெற்றுவரும்; வீரர் எல்லாம்
மெய்த்திருவை எடுத்துரைக்கும் ஜல்லி கட்டாம்
விளையாட்டை நாடியங்குச் சென்றா ரேனும்
கைத்தலத்தால் மூக்கனைத்தான் பிடிப்ப தற்கே
கருதுகின்ற திறமெவர்க்கும் வாய்க்க வில்லை!
புத்தமுது தந்தாலும் வேண்டாம் என்றார்
மூக்கன்பேர் கேட்டவுடன் நடுங்கிப் போனார்!

எங்கிருந்தோ ஓரிளைஞன் ஆங்கே வந்தான்
ஏறுபோலக் குதித்தெழுந்தான்; முரட்டு மூக்கன்
அங்கிங்கு நகராமல் மேல்வி ழுந்தே
அதன்கொம்பு பற்றிநின்றான்; ஆட்டி வைத்தான்;
சிங்கம்போல் சிலிர்த்துவந்த காளை தன்னைச்
சிக்கவைத்து நுரைதள்ளி வீழச் செய்தான்!
பங்கமின்றி வித்தையொன்று கற்றான் என்றே
பாராட்டுக் குவித்ததுவாம் அத்தி யூரே!

சங்கீதத் தேனருவிச் சேதி மோத
சரம்போலும் மூத்தபண்ணை வந்தார்; பார்த்தார்;
சிங்காரம் எனும்பகைவன் பெற்ற மைந்தன்
சீராளன் அவனெனவே கண்டார்; நொந்தார்
வெங்காரம் போல்வெடிக்க முடிய வில்லை
வேல்விழியாள் பூவாத்தாள் வாழ்வை யெண்ணி!
மங்காத மகிழ்ச்சியுடன் காட்சி தந்தார்
மகள்கரத்தில் அவன்கரத்தை இணைத்தார்; சென்றார்!





# பேரறிஞர் அண்ணா பவள விழா வளைவு

சென்னை-அமைந்தகரையில், அண்ணா நகர் செல்லும் வழியில் அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவு இரட்டை வளைவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் திறந்து வைத்தார். (1.1.86).

இந்தியாவிலேயே மிகப்பெரியதும், தமிழக சிற்பக்கலை நுணுக்கத்தோடு விளங்குவது மான இந்த வளைவு, சென்னை மாநகராட்சி யால் ரூ. 12 இலட்சத்து 21 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்டதாகும். இந்த இரட்டை வளைவுகள் ஒவ்வொன்றும் 57அடி உயரமும் 45 அடி அகலமும் உள்ளவை.

இரட்டை வளைவுகளின் மையப் பகுதி யில் பேரறிஞர் அண்ணா அவர்களின் முழு உருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது.

இவற்றை மாண்புமிகு முதல்வர் அவர் கள் திறந்துவைத்தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச் சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தலைமை யில் நடைபெற்ற இவ்விழாவில் பேசுகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள்—''நான் இந்த விழாவில் கலந்து கொண்டதில் பெரு மைப்படுகிறேன். என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என் ரத்தத் தின் ரத்தமான அன்பு உடன்பிறப்புகளே, உங்கள் எல்லாருக்கும் என் புத்தாண்டு வாழ்த் துக்கள். அண்ணா நாமம் வாழ்க. நன்றி''. என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில்-மாண்புமிகு அமைச்சர்கள் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன், திரு இராம.வீரப்பன், திரு கா.காளிமுத்து ஆகி யோரும் உரையாற்றினார்கள்.

இந்த அலங்கார வளைவை வடிவமைத் துக் கொடுத்த சிற்பி கணபதிஸ்தபதிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன் னாடை போர்த்தினார்.

சென்னை மாநகராட்சி சார்பில், மாண்பு மிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப்பரிசு அளிக்கப்பட்டது.

விழாத் தொடக்கத்தில் திருவையாறு அரசு இசைக்கல்லூரி மாணவர்கள் நாதசுர இசை வழங்கினார்கள்.

சென்னை மாநகராட்சித் தனி அதிகாரி திரு சந்திரசூடன், இ.ஆ.ப., வரவேற்புரை யோடு விழா தொடங்கியது.

மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்த ஷீலா நாயர் நன்றியுரையோடு விழா இனிது முடிவுற்றது.

இவ் விழாவுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், வாரியத் தலைவர்களும், சட்டப் பேரவை-மேலவை, நாடாளுமன்ற உறுப்பினர்களும் வருகைதந்திருந்தனர்.

—ராஜு




தமிழ்நாடு அரசின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் விழா வள்ளுவர் கோட்டத்தில் (15.1.86) சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் பங்கேற்ற இவ்விழாவில், மாண்புமிகு மேலவைத்தலைவர் டாக்டர் ம.பொ.சி., மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், திரு இராம. வீரப்பன், திரு செ. அரங்கநாயகம் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

விழாத் தொடக்கத்தில், தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் வரவேற்புரையாற்றினார்.

விழா முடிவில், தமிழ் வளர்ச்சி இயக்குநர் சிலம்பொலி சு. செல்லப்பன் நன்றி கூறினார்.

இந்த ஆண்டு தமிழக அரசின் சார்பில் திருவள்ளுவர் விருது பெற்ற தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, நற்சான்றிதழும், பரிசுத் தொகை பத்தாயிரம் ரூபாயும் வழங்கினார்.

கடந்த ஆண்டில் சிறந்த தமிழ் நூற்களை எழுதிய 27 எழுத்தாளப் பெருமக்களுக்கு முதல் பரிசு ரூ 2 ஆயிரம் வீதமும், இரண்டாம் பரிசு ஆயிரம் ரூபாய் வீதமும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். அப்புத்தகங்களை வெளியிட்ட பதிப்பாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் அளித்தார்.

ஆண்டு தோறும் தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் தின விழாவில் தமிழறிஞர்கள் 30 பேர்களுக்கு ஒய்வூதியம் வழங்கிச் சிறப்பித்து வருகிறது. இது வரை இப்படி 240 பேர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்விழாவில், முப்பது பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒய்வூதியம் வழங்கினார். இனி அவர்களுக்கும் தொடர்ந்து மாதம் ரூ 250 ஒய்வூதியம் கிடைக்கும்.

தமிழ்நாடு அரசு மொழி பெயர்ப்புத்துறை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட இரண்டு புத்தகங்களை இந்த விழாவில்

ஒரு பதிப்பாளர் சான்றிதழ் பெறுகிறார்.



சிறந்த கவிதை நூலுக்குரிய பரிசை தமிழரசு உதவி ஆசிரியர் கவிஞர் சாமி பழனியப்பன் பெறுகிறார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

''திருக்குறளைப் பிற மொழியில் சிறப்பாக மொழி பெயர்ப்பவருக்கு அடுத்த ஆண்டு முதல் திருவள்ளுவர் திருநாளில் பத்தாயிரம் ரூபாய் அரசு சார்பில் பரிசளிக்கப்படும்'' என்று தமது உரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் குறிப்பிட்ட மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ''அதற்கான உத்தரவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் இன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.



மொழி பெயர்ப்பு நூலுக்காக பரிசு பெறும் திரு தெய்வசிகாமணி

திருவள்ளுவர் திருநாள் விழாவை மாண்புமிகு சுற்றுலா அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் துவக்கி வைத்துப் பேசுகையில் ''தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் நூலாகக் கருதி திருக்குறளைத் தேசிய நூலாக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமரையும், மத்திய அரசையும் கேட்டுக் கொள்கிறேன்''' என்றார்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் உரையாற்றும்போது ''தமிழை வளப்படுத்த மறுபிறவி எடுத்த புரட்சித் தலைவரோடு இந்தத் திருவள்ளுவர் திருநாள் விழாவில் பங்கேற்பதில் பெருமைப்படுகிறேன்'' என்றார்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் ''அறிவு சேதாரம் அடைவதைத் தவிர்க்க வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்து மத்திய அரசால் ஏற்கப்பட்டுள்ளது; இவ்வாறு மனித சக்தியை வளப்படுத்தக் கூடிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது'' எனத் தமது உரையின்போது தெரிவித்தார்.



மொழி பெயர்ப்பு நூலுக்காக பரிசு பெறும் திரு தேசிகாச்சாரி


''தமிழுக்கு அமரர் அண்ணா அவர்கள் என்ன சிறப்புகளையெல்லாம் செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ, அவற்றையெல்லாம் இன்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமை ஏற்றுச் செயல்படுத்தி வருகிறார்'' என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்.


திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் குறள் நயம் பற்றிச் சிறப்புரையாற்றினார்.

திருக்குறள் விருது பெற்ற தவத்திரு குன்றக்குடி அடிகளார், தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு ஏற்புரை வழங்கினார்.

திருவள்ளுவர் திருநாள் காரணமாக புதுக்கோலம் பூண்டிருந்த வள்ளுவர் கோட்டத்தில், பல்லாயிரவர் திரண்டிருந்து விழாவைச் சிறப்பித்தார்கள்.

"இந்திரன்"





# சென்னையில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி



**செ**ன்னையிலுள்ள தீவுத்திடலில், 13வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - 1986 மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்களால் (9.1.86) தொடங்கி வைக்கப்பட்டது.


தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 22 ஏக்கர் நிலப் பரப்பில் அமைத்துள்ள இந்தப் பொருட்காட்சியின் துவக்க விழா அறிஞர் அண்ணா கலையரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்.

பொருட்காட்சித் திடலுக்கு வருகைதந்த மேதகு ஆளுநரையும், மாண்புமிகு அமைச்சரையும் யானையொன்று மாலை போட்டு வரவேற்றது.

65 நாட்கள் நடைபெறவிருக்கின்ற இந்தப் பொருட்காட்சியின் நுழைவுக்கட்டணம் நபர் ஒருவருக்கு ஒரு ரூபாயாகும்.

திருச்சி மலைக் கோட்டை போல இப்பொருட்காட்சியின் நுழைவுவாயில் அமைந்துள்ளது.

மத்திய அரசினுடைய 6 துறைகள் சார்பிலும், தமிழ்நாடு அரசினுடைய 26 துறைகள் சார்பிலும்








இங்கே எழிலுற அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழகத்தில் உள்ள 19 மாவட்டங்களும், மாநில அரசின் 15 நிறுவனங்களும் 32 தனியார் நிறுவனங்களும், 3 கைத்தறிச் சங்கங்களும் அமைத்த அரங்குகள் இத்திடலில் அணிசெய்கின்றன.

மற்ற மாநிலங்களைச் சேர்ந்த 208 விற்பனை நிலையங்கள் இங்கே இடம் பெற்றுள்ளன.

சிறுவர் சிறுமியர்க்கான ரயில்-திரைப்படம் -ராட்டினம்போன்ற பல பொழுதுபோக்கு விளையாட்டு அம்சங்களும் இங்குண்டு.


வெளிமாநிலங்களைச் சேர்ந்த சுற்றுலாத் துறை அரங்குகளில் அந்தந்த மாநிலங்களைச்சேர்ந்த கலை, கலாச்சாரம், கைவினைப் பொருட்கள், பழக்க வழக்க நடவடிக்கைகள் ஆகியவை மிகச் சிறந்த முறையிலே விளக்கப் பட்டுள்ளன.


பொருட்காட்சித் திடலில் நிரந்தரமாகக் கட்டப்பட்டுள்ள 'ஓட்டல் தமிழ்நாடு' (டிரைவ்-இன் ரெஸ்டாரெண்ட்) மூலம், சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், மக்களுக்கு மலிவு விலையிலே வழங்கப் பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'மாதவி கலையரங்கம்' தினசரி கலை நிகழ்ச்சிகளுக்காகக் கவினுற அமைக்கப்பட்டுள்ளது.

பாம்புப் பண்ணை, மீன் அருங்காட்சியகம் ஆகியவையும் இங்குண்டு.

பொருட்காட்சித் திறப்புவிழா







விற்கு வருகை தந்தோரை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஆணையர் மற்றும் செயலர் திரு. இரா. கிருபாகரன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார்.

விழா முடிவில், சுற்றுலாப் பொருட்காட்சித் தனிஅலுவலர் திரு எஸ்: துரைராஜ் நன்றி கூறினார்.

இந்த அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி யைத் திறந்து வைத்துப் பேசுகை யில்-மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''இங்கு குழந்தைகளும் பெரிய வர்களும் கண்டுகளிக்கும் அம்சங் கள் பல இருக்கின்றன. சுற்றுலாத் துறை தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் ஒரு துறையாக இருக் கிறது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை நன்கு முன்னேறி வரு கிறது. தேசியப் படகுப்போட்டி இங்கு நடந்தது. ஆசியப்படகுப் போட்டியும் இங்கே நடக்கவேண் டும் என்று வாழ்த்துகிறேன்.''

மாண்புமிகு சுற்றுலா அற நிலையத்துறை அமைச்சர் அவர் கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:



''கடந்த ஆண்டுப் பொருட் காட்சியில் 24 லட்சம் ரூபாய்க்கு மேல் நிகரலாபம் கிடைத்தது. இந்த ஆண்டு 74 லட்சம் பேர் இங்கு வருவார்கள் என்று கணக் கிடப்பட்டு ரூ. 28 லட்சம் நிகர லாபம் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

''சுற்றுலாத்துறையைத் தொழி லாகக் கருதி அரசு அனுமதித்தா லும் வெறும் லாப நோக்கத் தோடு மட்டும் இதைத் தனியார் நடத்துவது முறையல்ல. தனி யார் நடத்தினாலும் அரசு ஒப்பு தலோடுதான் நடத்தவேண்டும்.

''மத்திய அரசு, அரசுக்கு அதிக அளவில் அன்னியச் செலா வணி ஈட்டித்தரும் இந்தத் துறை யின் வளர்ச்சிக்கு அதிக அளவில் நிதி உதவ முன்வரவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.''

—இப்பொருட்காட்சி திறப்பு விழாவிற்கு மாண்புமிகு அமைச் சர்கள் திரு என். நல்லுசாமி, திரு ஆரூர் ஜெகதீசன், திரு அ. அருணாசலம் - மற்றும் வாரியத் தலைவர்கள் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

—'இந்திரன்'




# தமிழ் நாடு அறக்கட்டளை

அமெரிக்காவில் வாழும் தமிழர்களெல்லாம் இணைந்த 'தமிழ் நாடு அறக்கட்டளை' என்றொரு அமைப்பு, டாக்டர் பெரியசாமி அவர்களால் 1974ல் அமைக்கப்பட்டது. அங்கு வாழும் தமிழ் மக்களின் கல்வி, தொழில், சமூக மேம்பாடு போன்றவை இந்த அமைப்பின் முக்கியக் குறிக்கோள்களாகும்.

அமெரிக்க நாட்டில் கல்வி பயிலும் தமிழக மாணவ, மாணவியருக்குத் தக்கபடி உதவிவருகின்ற இவ்வமைப்பின் மூலம், இங்கு தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்கள், ஆதரவற்றோர் இல்லங்களும் உதவி பெறுகின்றன. தமிழகத்திலும், ஆந்திர மாநிலத்திலும் ஏற்பட்ட வெள்ளச்சேதத்தால் அல்லது வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இவர்கள் செய்த உதவி இணையற்றதாக இருந்தது.

இதற்கு ஆங்காங்கே பல்வேறு கிளைகள் உள்ளன. 'தமிழ்நாடு அறக்கட்டளை'யின் 11-வது கிளை சென்னையில் அமைக்கப்பட்டது(டி.-1-86).

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்- இந்த அறக்கட்டளை கட்டடத்திற்காகக் கீழ்ப்பாக்கம் டெய்லர்ஸ் ரோட்டில் மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள 3 கிரவுண்ட் நிலத்தை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார்.

இந்த அறக்கட்டளையின் தொடக்க விழா, கலைவாணர் அரங்கில், தொழில் அதிபர் திரு ந.மகாலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பங்கேற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அமெரிக்காவில் வாழும் தமிழர்களின் அறக்கட்டளையைத் தொடங்கி வைத்து, அதனுடைய அலுவலகக் கட்டடத்திற்கும் அடிக்கல் நாட்டினார்.

சென்னையில் உள்ள அமெரிக்க நாட்டுத் தூதர் டாக்டர் ஜான்டி





ஸ்டெம்பல் கலந்துகொண்டு ஆங்கிலத்திலும் தமிழிலுமாகப் பாராட்டுரை வழங்கிய இக்கூட்டத்திற்கு வருகை தந்தோரை வரவேற்று டாக்டர் பெரியசாமி பேசினார்.

''அறக்கட்டளை அலுவலகக் கட்டடத்தில் சிறந்த விஞ்ஞான நூலகம் அமைக்கப்படும். நவீன தொழில் நுட்பக் கருத்தரங்கு நடத்த ஆலோசனைக் கூடமும், மேனாட்டறிஞர்கள் தமிழகம் வந்தால் தங்குவதற்கான அறைகளும் கட்டப்படும். இங்கிருந்து அமெரிக்க நாட்டிற்கு உயர்கல்வி பயிலச் செல்லும் மாணவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வசதிகளையும் செய்துதர இந்த அமைப்பு பெரிதும் பாடுபடும்'' என்று அப்போது அவர் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, டாக்டர் பெரியசாமி அவர்கள் அமெரிக்க நாட்டில் வாழும் தமிழ்மக்களின் சார்பாக நினைவுப் பரிசொன்று வழங்கினார்.

இவ் விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், திரு இராம.வீரப்பன், திரு.சி.பொன்னையன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

''இன்னும் சில வாரங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில்




உலகத் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைக்க விருக்கிறார். இச் சங்கம் 32 நாடுகளில் வாழும் தமிழர்களை இணைக்கும் சங்கமாக இருக்கும். இதில் இந்தியப் பிரதி நிதிகள் மட்டுமன்றி, உலக நாடுகள் முழுவதிலும் உள்ள பிரதிநிதிகளும் இருப்பார்கள்''-என்று மாண்புமிகு சுற்றுலா அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தமது உரையின்போது குறிப்பிட்டார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.பி.எச்.பாண்டியன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு. செ.அரங்கநாயகம், திரு.எஸ். திருநாவுக்கரசு, திரு.எச்.வி: ஹண்டே, ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

விழா முடிவில் டாக்டர் எம். ஜி. சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

—பி. எல். ஆர்.

## 10½ இலட்சம் அரசு ஊழியர்க்குப் பொங்கல் பரிசு!

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் நடத்திய போராட்டம், 1985 டிசம்பர் மாதம் 11ஆம் தேதியன்று மாண்புமிகு முதல்வர்—ஆசிரியர் பிரதிநிதிகள் சந்திப்பின் வாயிலாகத் திரும்பப் பெறப்பட்டது.

"ஆசிரியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஒரு தொகை பொங்கல் ப்ரிசாக வழங்கப்படும்'' என்று அறிவித்தார் மாண்புமிகு முதல்வர்.

சொன்னதைச் செய்வது இந்த அரசின் தலையாய குறிக்கோள் என்பதை மெய்ப்பிக்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைப்படி, 12.1.1986ல் பொங்கல் பரிசு குறித்த அறிக்கையை அரசு வெளியிட்டுள்ளது.

"தமிழ்நாடு முழுதும் ஆசிரியர்கள் உட்பட அனைத்து அரசு ஊழியர்களுக்கும் அவரவர் சம்பள விகிதத்தை அனுசரித்து பொங்கல் பரிசு ரூ.200, ரூ. 250, ரூ. 300 என வழங்கப்படும்'' என்று அந்த அறிக்கை தெரிவித்தது.

உள்ளாட்சி அலுவலர்கள், அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலர்கள் ஆகியோரும் இந்தப் பொங்கல் பரிசுக்கு உரியவர்கள்.

ரூ. 750ம் அதற்குக் கீழும் அடிப்படைச் சம்பளமாக பெறுவோருக்கு ரூ. 200ம், ரூ.750க்கு மேலும் ரூ. 1600க்குக் கீழும் பெறுவோருக்கு ரூ. 250ம், ரூ. 1600க்கு மேலும் ரூ. 2500க்குக் கீழும் பெறுவோருக்கு ரூ. 300ம் பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தத் தொகையை மாத ஊதியமாகப் பெறுவோருக்கு ரூ 100 பொங்கல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தமாக ஊதியம் பெறுவோர் உட்பட மொத்தம் 10½ இலட்சம் பேர் இந்தப் பொங்கல் பரிசினால் பயன்பெற்றுள்ளனர். இதன் மூலம் அரசுக்கு ரூ 22 கோடி கூடுதலாகச் செலவாகிறது.

சென்ற ஆண்டு (1985) பொங்கல் திருநாளின்போது அரசு அலுவலர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டபோது ரூ. 350க்குக் கீழ் அடிப்படைச் சம்பளம் உள்ளவர்களுக்கு ரூ. 100ம், ரூ. 350க்கு மேல் அடிப்படைச் சம்பளம் உள்ளவர்களுக்கு ரூ. 150ம், பொங்கல் பரிசாக வழங்கப்பட்டது நினைவு கூரத்தக்கது.

# விந்தலையின் விலை

## விக்கிரமன்

பெரும் பற்றப் புலியூர் என்று அழைக்கப்படும், சிதம்பரத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த மாளிகையில் இராசேந்திரசோழர் வீற்றிருந்தார். ஓய்வு இன்றி நேரம் காலம் பாராமல் அவர் பலருடன் மந்திராலோசனை நடத்தி வந்தார்.

சோழ நாட்டில் புதிய தலை நகரத்திற்கான இடம் தேர்ந் தெடுக்கப்பட்டுவிட்டது. பழை யாறையினின்று சிறிது தொலை வில் கொள்ளிடத்திற்கு மிக அருகே விசாலமான காட்டுப் பகுதியை அவர் தேர்ந்தெடுத் தார்.

தில்லையம்பதியிலிருந்து தென் மேற்கே இருபது கல் தொலை வில் அந்தப் பூமி விளங்கியதால் புதிய தலைநகர அமைக்கும் பணியைக் கவனிக்க எளிதாக இருக்கும் என்று தில்லையம்பதி யில் தங்கியிருக்கவும் அவர் முடிவு செய்தார். அங்கே புதிய அழகிய மாளிகையும் கட்டப்பட்டது.

புதிய தலைநகரை தஞ்சை யைப் போல் மிகப் பெரியதாக அமைப்பதோடல்லாமல், அங்கே தஞ்சையிலுள்ள பெருவுடை யார் கோயிலைப் போன்றே பெரிய அளவில் கோயில் ஒன்று கட்டவும் உயர்ந்த விமானம் அமைக்கவும் திட்டமிட்டார்.

அதற்கான வரைபடங்கள் வரைபவர், கட்டட நிர்மாண வல்லுநர்கள், சிற்பிகள் அவ்வப் போது பேரரசரைச் சந்தித்து, அரசர் கூறுவனவற்றைக் கவன மாகக் கேட்டு விவாதித்துக் கொண்டிருந்தனர்.

இதற்கிடையே வடக்கு நோக் கிப் படையெடுப்பு ஒன்றைக் குறித்துத் தளபதிகள் மந்திரா லோசனை புரிந்து வந்தனர். மேலைசாளுக்கிய நாட்டுவேந்தன் சத்தியாசிரயன் சோழ நாட் டைத் தாக்கப் பெருந் திட்டம் தீட்டி வருகிறான் என்பதை ஒற் றர்கள் மூலம் உணர்ந்த இராச ராசன், அதற்கு முன்பே அவர்கள் தலைநகரான மண்ணைக் கடக் கத்தைத் தாக்கத் திட்டமிட் டான்.

அதற்கான போர் முறைகள், படை திரட்டுதல் பற்றி விவா திக்க இராசமல்ல முத்தரையன் வந்திருந்தார். அவருடன் கலந்தா லோசித்துக் கொண்டிருந்தபோது தான் தஞ்சைக் கோயில் ஸ்ரீ காரியம் கவனிக்கும் சேந்தன் மிகப் பணிவுடன் அரசரைக் காண வந்து நின்றார்.

இராசேந்திர சோழ தேவர் தில்லையில் சென்று தங்கிய பிறகு பல அரசியல் பணிகளைப் பற்றி உத்தரவு பெற, அதி காரிகள் தஞ்சையினின்று சிதம் பரம் வர வேண்டியிருந்தது. அது போல், கோயிலின் நிர்வாகச் செயல் குறித்துக் கட்டளைபெற சேந்தன் வந்திருப்பதாக நினைத்த இராசேந்திரன், அவரிடம் பிறகு அமைதியாகப் பேசலாம் என்று அவரைக் காத்திருக்குமாறு கூறி னார். இராசமல்ல முத்தரைய ரோடு மிக முக்கியமாகக் கலந் தாலோசித்துக்கொண்டிருப்பதை மறைமுகமாகத் தெரிவிக்க விரும்பி, ''இன்று இரவு தங்கி நாளைச் செல்லலாம் அல்லவா, சேந்தனாரே?'' என்று கேட் டார்.

மிகப் பணிவுடன் சேந்தன் சொன்னார்: ''நான் தெரிவிக்கப் போவதும் தாங்கள் முத்தரைய ரோடு கலந்து பேச வேண்டிய மிக முக்கிய செய்திதான்.''

இராசராசன் புருவம் உயர்த்தி ''என்ன! மேலைச் சாளுக்கியர் தொடர்பான செய்தியா?'' என்று கேட்டார்.

''ஆம், பேரரசே! சத்யாசிரய னுடைய ஒற்றர் ஒருவரைப்பற்றிய செய்தி எனக்குக் கிடைத்தது'' என்று அவர் கூறுவதை, இராச மல்லனும் கூர்ந்து கவனிக்க லானார்.

மார்கழி திருவாதிரை நாளன்று வழக்கமாகச் சிறப்பாகக் கொண் டாடப்படும் இராசேந்திர சோழ தேவரின் பிறந்த நாள் விழாவில் கூத்து நிகழ்த்தும் இரத்தின வல்லி அன்று நடனமாட வர வில்லை.

இரவு வெகுநேரம் காத்திருந்த மக்கள் சலிப்புடன் கலைந்தனர். தேடிச் சென்றபோது வீட்டிலும் அவள் இல்லை. எங்கே சென் றாள் என்பதைச் சொல்லவும், அவள் வீட்டில் ஒருவராலும் இயலவில்லை.

அந்தநேரத்தில் வெண்ணாற்றங் கரை மணற் பரப்பில் நீல வானத் துப் பின்னணியில் வட்ட முழுமதி யின் அழகை ரசித்தவாறு இரத் தினவல்லியும், நரேந்திரனும் பேசிக் கொண்டிருந்தனர்.

இரத்தினவல்லியின் தாய் வறுமை நிறைந்த குடும்பத்தில் பிறந்தவள். தன் மகளும் வறுமைப் பிடியில் ஆட்படக் கூடாது என்ப தற்காக, தன் மகளைத் தஞ்சைக் கோயிலின் தெய்வ கைங்கர்யம் செய்ய குழந்தையாயிருந்த போதே விற்று விட்டார்.

அடிமை புகுந்த பெண்ணான இரத்தினவல்லியோ, தான் அடிமை என்று ஒருபோதும் எண் ணாமல் நாட்டியக் கலையைக் கற்று அக்கலையில் தேர்ந்தாள்.

அவளுடைய நடனச் சிறப்பை இராசராசசோழர் மிகவும் பாராட்டி அவளுக்கு இறையிலி யாக நிலமும் வீடும் வழங்கினார்.

பொதுப் பெண்டிர், பதியிலா தார் என்றவள் அழைக்கப்பட் டாலும் பெரும் மரியாதை அவளைப் போன்ற நாட்டியப் பெண்களுக்கு நாட்டிலும், அர சாங்கத்திலும் அளிக்கப்பட்டது. தேவரடியார் என்று உயர்வாகக் கூறி அவர்களை அழைத்து மரி யாதை செலுத்தினர். மன்னரை யும் மற்றும் அதிகாரிகளையும் எப்போதும் சந்திக்கும் உரிமை அவர்களுக்கு இருந்தது. இரத் தினவல்லிக்கு மேலும் பல சலு கைகள் அளிக்கப்பட்டன. ஆனால்



பெருவுடையார் சந்நிதியிலும், மன்னரது திரு முன்பும் நாட்டிய மாடிப் புகழும் மரியாதையும் பெற்ற இரத்தினவல்லியின் மனத்தில் ஒருவித ஏக்கம் சிறிது சிறிதாக வளர்ந்தது.

நரேந்திரனைச் சந்தித்த பிறகு அவளுள்ளத்தில் ஏக்கத்துடன் ஒருவிதப் பரபரப்பும் ஏற்பட்டது. பிற ஆடவரைக் காணும்போது உள்ளத்திலும் உடலிலும் ஏற் படாத புதிய சிலிர்ப்பு அவனைச் சந்தித்தபோது ஏற்பட்டது.

''நாள்தோறும் இந்த வழியே செல்லும்போது தங்களைப் பார்க் கும்போது தங்களுடன் ஒரு வார்த்தையாவது பேச வேண்டும் என்ற ஆவல் என்னுள்ளத்தில் எழும். ஏன் அப்படி ஏற்படுகிறது என்று எனக்குப் புரியவில்லை'' என்று நரேந்திரனைப் பார்த்து ஒரு நாள் அவள் கேட்டுவிட்டாள்.

நரேந்திரனுடைய நிமிர்ந்த தோற்றம், சுருள் கேசம், கூரிய விழிகள், பரந்த தோள்கள் அவளைக் கவர்ந்திருக்க வேண் டும்.

காதல் ததும்பும் அவள் குரலை ஏற்ற நரேந்திரன், 'நானும் அப்படித்தான் நினைத்தேன்' என்று மட்டும் சொல்லவில்லை. முறுவலித்தான்! அவனுடைய புன்முறுவல் ஆயிரம் பொருள் களைப் பேசின. அவன் பல நாட்களாக எதிர்பார்த்து ஏங்கிய தற்கு இன்று புதிய பூபாளம் கிடைத்தது. அவளுடைய நிருத் யங்களைக் கண்டிருக்கிறான். இறைவன் முன்பு அவள் ஆடும் போது அவளுடைய அங்க அசைவு களைக் கண்டிருக்கிறான். கரங் களின் நெளிவிலும், இடை வளைவதிலும், விழிகள் பேசுவ திலும், சில போது மெல்லிய பற்கள் செவ்விதழ்களினின்று முத்துப்பரல் போல் எட்டிப் பார்த்து, பாடலை முணு முணுத்து முறுவலிப்பதிலும், பாதங்கள் அசைவதிலும் அவன் மனத்தைப் பறி கொடுத்திருக் கிறான். அப்பொழுதே ஓடிச் சென்று அவளை அணைத்து, தன் இதய ஒலியைத் தன் இதழ் மூலம் அவள் பூக்கன்னங்களிலே தெரிவிக்கத் துடித்திருக்கிறான்.

நிறைவேறவில்லை. அவளை நெருங்க முடியவில்லை. தெய்வத் திற்குத் தன்னை அர்ப்பணித்த வள், கலைக்கு என்று தன்னை ஈடுபடுத்திக் கொண்டவள் — மேலும் அவள் தாய் வறுமை காரணமாக அவளைக் கோயி லுக்கு விற்று விட்டதால் அவள் பரம்பரை அடிமை, - அவள் தேவரடியாள் என்றெல்லாம் அவளைப் பற்றி அவன் அறிந்து கொண்டான். அழகுக்கு ஓர் சிறையா?

வெண்ணாற்றங் கரையில் அவர்கள் சந்திக்கும் வாய்ப்பு நிகழ்ந்தது. ஒரு நாள் அவன் அப்படித்தான் அவளை வினவி னான்: 'அழகைக் கலைக்கூண்டிற் குள் சிறைப்படுத்தி வைக்கலாமா? மலரைச் செடியில் வாட விட லாமா?'

இதைக் கேட்டு இரத்தினவல்லி மெல்ல நகைத்தாள். 'இறைவன் திருவழகை வர்ணித்துத்தான் நான் கேட்டிருக்கிறேன். ஒரு சாதாரணப்பெண்ணை மலரென் றும் மதியென்றும் வர்ணிக்கிறீர் களே'' என்று அவள் கூறிக்கொண் டிருக்கும்போதே அவன் அவ ளிடம் சிறைப்பட்டான்.

''நரேந்திரா! கருவறை யிலுள்ள இறைவன் திரு உரு வத்தைத் தவிர வேறு உரு வத்தைக் கண்டறியாதவள். நினைப்பது, பேசுவது எல்லாம் ஆண்டவனைப் பற்றித்தான். அந்த நெறியினின்று மாறக் கூடாது என்று கண்டிப்பு எங் களுக்கு. தேவனுக்கு அடியவ ளான நான் நரேந்திரனுக்கு அடிமையாகி விட்டேன். அப்படி யென்ன வசீகரம் உங்களிடம்?'' என்று அவள் கேட்கும் போது, நரேந்திரன் மெய் சிலிர்த்த

அவளை அப்படியே அணைத்தான்; அணைத்தவாறு வானில் மிதந்து வேறு உலகு சென்று விடலாமா என்று எண்ணினான்.

''இப்படித் தனியே ஓர் ஆடவனைச் சந்திப்பது பெரிய குற்றம். என்னைக் குற்றவாளியாக்கி விட்டீர்களே'' என்று அவள் சிணுங்கினாள்.

''குற்றவாளியான உன்னை நான் விடுதலை செய்கிறேன்'' என்றான் நரேந்திரன்.

''உன்னால் முடியாது; என்னை விடுதலை செய்ய உன்னால் முடியாது'' என்று கூறி அவன் அழுத்தத்தினின்று தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள் இரத்தினவல்லி.

என்னால் முடியும் என்பதற்கு அடையாளமாக அவன் தன் முக முத்திரையைப் பதித்தான்.

'முடியாது - முதலில் இப்பொழுது என்னை நீங்கள் சிறைப்படுத்தியிருக்கிறீர்களே அதிலிருந்து விடுவிக்கிறீர்களா?''

இருவரும் சிரித்தனர். அணைப்பு மேலும் இறுகியது.

இரத்தினவல்லி அடிமை வாழ்வினின்று விடுதலை பெற விரும்பினாள். ஆனால், அது இயலாத காரியம் என்பதும் அவளுக்குத் தெரியும்.

* * * * *

அவள் நடவடிக்கைகளை அறிந்த அவள் உயிர்த்தோழி சொன்னாள்; ''பைத்தியமே! அடிமை - என்ற சொல்லின் பொருளே உனக்குப் புரியாது. இறைவனுக்கு அடிமையாயிருப்பதால்தான் நமக்குப் புகழ், மரியாதை, பட்டாடை, பொன்னாபரணங்கள், வீடு, நிலம் எல்லாம் கிடைக்கின்றன. இந்த அடிமைத்தனத்தின் மேல் உனக்கு வெறுப்பு வந்ததேன்?''



இரத்தினவல்லி சோர்வுடன் "சிறையாறும் மடக்கிளிக்கு முறையாகப் பாலும் பழமும் தந்தால் மட்டும் போதுமா?'' என்றான்.

''நீ என்னதான் சொல்கிறாய்?'' தோழி கேட்டாள்.

"எனக்கு இந்தப் பொன்விலங்கு பிடிக்கவில்லை."

"கள்ளி! எனக்குத் தெரியும். நீ ஆண் சுகத்தின் ருசி பார்த்து விட்டாய். மகாபாவம். வெளியே தெரிந்தால் அரச கோபமுண்டு. தண்டனையும் கடுமை...''

''விடிவே கிடையாதா? விடுதலையே கிடையாதா?''

''உண்டு; உன் தாய் உன்னைப் பெரும் பொற்காசுக்கு விற்று விட்டாள். அதைப்போல் பல மடங்கு - கோயில் தலைவர் கேட்கும் தொகை கொடுத்தால் ஒருவேளை உனக்கு விடுதலை கிடைக்கலாம்."

"சொல்லாமல் ஓடிப் போய் விட்டால்? விட்டு விடுதலையாகி விட்டால்?''-இரத்தினவல்லி துணிவுடன் கேட்டாள்.

நரேந்திரனும் இதையேதான் அவளிடம் கேட்டான். "ஏன் பயப்படுகிறாய் இரத்தினவல்லி? யாருமறியாமல் நாம் இந்த ஊரிலிருந்து வெளியேறி விடுவோம்.''

''எங்கே போவது? சோழ சக்கரவர்த்திகளுக்கு எட்டுத் திசையும் சொந்தம். எங்குச் சென்றாலும் நம்மைக் கட்டி இழுத்து வந்து விடுவார்கள். பிறகு விடிவற்ற நிஜமான அடிமை வாழ்வுதான். காராக்கிரக வாழ்வு" என்றாள்.

நரேந்திரன் சிரித்தான்: "சோழ சக்கரவர்த்திகளின் கொடி எல்லா இடங்களிலும் பறக்கவில்லை. சோழர் கொடி மிதிபட்டிருக்கும் இடமுண்டு."

இரத்தினவல்லி திடுக்கிட்டாள். "என்ன சொல்கிறீர்கள். சோழ நாட்டை அவமரியாதைப்படுத்துவதுபோல் இருக்கிறதே தங்கள் பேச்சு...'' என்று கவலையுடன் கூறினாள்.

நரேந்திரன் துணிவுடன்'' நமது காதல் சாம்ராஜ்யத்தின் எதிரே

எந்தப் பெருநாட்டின் எதிர்ப்பும் நிற்க முடியாது.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என் மனத்தில் பெரிய குழப்பம். கவலை அலைகள், என் இதய மேடையைப் பலமாகத் தாக்குகின்றன. என்னால் நடனமாட முடியவில்லை. உங்களை மறக்க முயல்கிறேன், முடியவில்லை. கருவறையில் பெருவுடையாருக்கு மாறாக நீங்கள் அங்கு நின்று சிரிக்கிறீர்கள். உங்கள் அழகுச் சிரிப்பு என்னை மயக்கிவிட்டது. குறிப்பிட்ட நேரத்தில் நடனமாட முடியவில்லை. நடனமாடினாலும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியவில்லை. அடுத்து என்ன செய்வது சொல்லுங்கள்" நெஞ்சு தழுதழுக்கக் கேட்டாள்.

உதட்டில் குறும்புத்தனம் தவழ நரேந்திரன் கண்டிப்புக் குரல் மிளிரக் கூறினான்; "ஒரே வழி என்னை மறந்து விடுவது."

இரத்தினவல்லி சீறினாள்: "என்ன சொன்னீர்கள்; உங்களை மறப்பதற்காகவா நான் பெருவுடையார் சந்தியை மறந்தேன். என் இரத்தத்தோடு ஒன்றிப் போன நாட்டியக் கலையை மறந்தேன். உங்கள் உள்ளம் என்னை மறக்க நினைக்கலாம்; ஆனால் என் இதய அரங்கில் இறைவனுக்கு அடுத்தபடியாக உங்களை ஏற்றி வைத்த நான் இறைவனை மறந்தாலும் உங்களை மறக்க மாட்டேன். நீங்கள் என்னை வெறுத்தால் நான் இந்த உலகை விட்டுச் செல்லவே முயல்வேன்". அழுத்தமாக வந்தது பேச்சு. நரேந்திரன் எதிர்பார்க்கவில்லை.

நரேந்திரன் தான் கூறியது உண்மையல்ல என்று கூறி அவளைச் சமாதானப்படுத்த பெரும்பாடு பட்டான்.

திருவாதிரை நாளன்று இரத்தினவல்லி நடனமாட மறந்தாள். விழாக்கூடத்தில் கலந்துகொள்ள மறந்தாள். பொதுக்கூத்துக்கும் வரவில்லை. வெண்ணாற்றங் கரையில் நரேந்திரன் அணைப்பிலும், பேச்சிலும் தன்னை மறந்திருந்தாள். அன்றே தஞ்சையை விட்டு வெளியேறிவிடும் திட்டத்தை வகுப்பதில் முனைந்திருந்தாள்.

* * * * *

சிதம்பரம் நகர மாளிகையில் இராசேந்திர சோழரிடம் இவற்றையெல்லாம் கூறிய சேந்தன் மற்றொரு செய்தியையும் கூறினார்.

"சாளுக்கிய நாட்டினின்று வந்தவன் நரேந்திரன். ஆனால்



நமது படைபலம் அறியவோ, போர்த்துறை அறியவோ வரவில்லை. சித்திரக் கலை நுணுக்கம் கற்றறிய வந்திருக்கிறார். பெருவுடையார் கோவில் கருவறையைச் சுற்றி எழுதப்பட்டுள்ள சித்திரங்களைக் கண்டு அழியா வர்ணம் தீட்டும் முறையைக் கண்டறிந்து செல்ல வந்துள்ளார். நமது ஓவியர் சித்திரசேனரிடம் மாணாக்கனாகச் சேர்ந்து ஓவியம் பயின்று வருகிறான். ஓவியக் கலையைக் கற்றுச் செல்வதுடன் நாட்டியக் கலைவாணி இரத்தினவல்லியையும் கவர்ந்து செல்லத் திட்டமிட்டு விட்டான்" என்றுகூறியது கேட்டு, இராசேந்திர சோழர் சிறிது நேரம் சிந்தித்தார். 'ஓ! மேலைச் சாளுக்கியர்கள் நம்மிடம் மோதத் துணிந்து விட்டார்களா? மான்யகேட நகரில் பெரிய சித்திரக்கூடம் அமைக்கப் போகிறீர்களா?' என்று கூறியவர் எங்கிருந்தாலும் இரத்தினவல்லியையும், நரேந்திரனையும் சிறைப் பிடித்து வருமாறு கட்டளையிட்டார்.

* * * * *

தில்லை நகரத்து அரச மாளிகையில் வீற்றிருந்த இராசேந்திர சோழர் எதிரே இரத்தினவல்லியும், நரேந்திரன் தலைகுனிந்து நின்றிருந்தனர்.

இராசேந்திர சோழ தேவர் நரேந்திரனைப் பார்த்து "தஞ்சை மாநகருக்கு நீ வந்து இரண்டாடுகள் ஆகின்றன. சித்திரசேனரிடம் ஓவிய நுணுக்கம் பயின்ற நீ இரத்தினவல்லியின் மனத்தைக் கவர்ந்தது எப்போது?" என்று கேட்டார்.

நரேந்திரன் உடனே மறுமொழி கூறவில்லை.

"நான் சொல்கிறேன்; உன் காதல் வளர்ந்தது மூவிரு திங்களில்தான். அப்படித்தானே?"

"ஆமாம்; சக்கரவர்த்திகளே!" நரேந்திரன் பணிவுடன்கூறினான்.

"சாளுக்கிய மன்னர் சந்தியாசிரயர் உன்னை ஓவியம் கற்று வரச் சொன்னதோடு காதல் புரியவும் சொன்னாரா?"

மெல்ல உதட்டை ஈரப்படுத்திக்கொண்டு, "ஒருவர் சொல்லி வருவதில்லை காதல். கட்டாயத்தில் மலருவதில்லை காதல்" என்றான்.

"அப்படியென்றால், நீ காதலிப்பதன் மூலம் உங்கள் நாட்டிற்குத் துரோகம் செய்து விட்டாயே சரிதானா?" – அரசர் கேட்கவும், "அதெப்படி?" என விழித்த நரேந்திரனைப் பார்த்து, "ஆம்; உன்னைப் போன்றவர்களைக் கலை நுணுக்கம் அறிந்து வர அனுப்பிய உன் அரசனைத்தான் சொல்லவேண்டும். இதோ காதல் வலையில் சிக்கி, சோழ நாட்டில் சிறைப்படப் போகிறாயே! சிறையோ- மரணதண்டனையோ சொல்ல முடியாது. இரண்டு மூன்று குற்றங்கள்; மாற்றான் நாட்டிலிருந்து இரகசியமாக வந்து உளவு பார்த்தது; தேவனுக்கே தன்னை அடிமைப்படுத்திக்கொண்ட சோழநாட்டுப் பெண்ணைக் காதலித்தது; அவளுடன் நாட்டை விட்டு ஓடப் பார்த்தது..." என்று கூறியவர் சற்று நிறுத்தி, அவள் முக உணர்ச்சியை நோக்கினார்.

பிறகு தொடர்ந்து 'ஒரு முறை ஓவியர் சித்திரசேனர் உன்னிடம் மனம் விட்டுப் பேசினாரே, நினைவிருக்கிறதா? 'எனக்கு வயதாகிறது தம்பி, நரேந்திரா! எனக்கு வாரிசாக நீ அமைந்து ஓவியக் கலையை வளர்த்து வரவேண்டும் என்பதே என் ஆசை' என்று அவர் சொன்னார், அது நினைவிருக்கிறதா?

"உன் முகம் மாறியது; உன் சொந்த ஊருக்குப் போகப் போவதாகவும், ஓவியக் கலையைத் தொடரப் போவதில்லை என்றும் சொன்னாய். அதுவரை உனக்கு எந்த ஊர் என்று கேட்டறியாத ஓவியர், உன் ஊரைப் பற்றியும், உன் பெற்றோர்களைப் பற்றியும் பரிவுடன் விசாரித்தார். நீ சரியாகச் சொல்லவில்லை...."

மன்னர் இராசேந்திர சோழர் சற்று நிறுத்தினார். நரேந்திரன் பரபரப்படைந்தான். அவன் முகம் மாறியது. "சக்கரவர்த்திகளே! நடந்தது நடந்தபடியே, என்ன பேசினோம் என்பதையும் முக உணர்ச்சியைக்கூடத் துல்லியமாகச்சொல்கிறீர்களே. ஒற்றர்கள் கேட்டறிந்து சொன்னால்கூட இப்படித் தெளிவாகக் கூறியிருக்க


முடியாதே. உங்களுக்குச் சொன்னது யார்?'' என்று நடுங்கும் குரலில் கேட்டவுடன்—

“ஓவியக் கலைஞரே! நீ மிகத் திறமைசாலி. இயற்கையிலே திறமை வாய்ந்த நீ, எங்கள் சோழ நாட்டிலிருந்து சித்திர நுணுக்கங்களைக் கொண்டு செல்வது போதாதென்று, அருமை நாட்டியமணி இரத்தினவல்லியையும்கவர்ந்து செல்லத் திட்டமிட்டாய். ஐயோ பாவம்! கையுங் களவுமாக இருவரும் பிடிபட்டு விட்டீர்கள்...என்ன தண்டனை கிடைக்கும் என உணர்ந்திருந்தால் செய்திருக்க மாட்டாய். காதல் அவ்வளவு எளிதல்ல, நரேந்திரா! சோழநாட்டை ஏமாற்றுவதும் எளிதல்ல”...என்று கூறி நிறுத்தியபோது, நரேந்திரன் கண்களில் நீர் தளும்பியது. பயத்தால் உடல் நடுங்கியது.

“சக்கரவர்த்திகளே! இரத்தினவல்லியை நான் அபகரித்துச் செல்லத் திட்டமிட்டதாகமட்டும் குற்றஞ் சாட்டாதீர்கள். எங்கள் காதல் தெய்வீகமானது. சோழ நாட்டில்நாட்டியப்பெண்களுக்குத் தேவரடியார்கள் எனப் பெயர் கொடுத்து அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அவல நிலையை எதிர்த்து விடுதலையடைய விரும்பிய இரத்தினவல்லியின் முழுச் சம்மதத்துடன்தான் அவளை அழைத்துச் செல்ல விரும்பினேன். சோழசக்ரவர்த்திகளைஏமாற்றும் எண்ணம் எனக்கு இல்லை.யாரோ கூறியதைக் கேட்டு நேரில் கண்டதுபோல் பேசுகிறீர்கள்'' என்றான்.

இராசேந்திர சோழர் பெரிதாக நகைத்தார். ‘‘சித்திரக் கலைஞர் நரேந்திரனே! உம்முடன் சித்திர சேனரிடம் ஓவியம் பயின்றாரே ஓர் முதியவர்...நினைவிருக்கிறதா?'' என்று கேட்டார், அவனைக் கூர்மையாகப் பார்த்தவாறு.

“ஆம்; ஆம்...அடர்ந்த தாடி மீசையுடன் ஓர் வயதானவர்; அந்த வயதிலும் அவர் ஓவியக் கலையை ஆவலுடன் கற்றுக் கொண்டார். சித்திரம் வரைய முடியாவிட்டாலும் வண்ணச் சேர்க்கையைப் பற்றித் தெளிவான கருத்தை அவ்வப்போது வெளியிட்டார். கேட்டறிந்தார்; அழியாத வண்ணக் கலவை நுணுக்கங்களைக் கற்றார். அடிக்கடி என்னைப் பார்ப்பதும், ஓவியத் தலைவரைப் பார்த்து, ‘‘குருதேவரே! கலை நுணுக்கங்கள் அனைத்தையும் கற்றுத் தந்துவிடக் கூடாது; இரகசியமான வண்ண முறைகளை இப்படி அம்பலப்படுத்துகிறீர்களே.'....... என்று கேட்பாரே..அவர்தானே?''



“நரேந்திரா! சித்திரசேனரிடம் சித்திரம் பயின்ற அந்த முதிய மாணவர் வேறு யாருமல்லர்; நானேதான். தஞ்சைப் பெருவுடையார் கோயில் சித்திரக் கூடம் போன்று நான் அமைக்கப் போகும் தலைநகரத்துக் கோயிலிலும் சித்திரக் கூடம் அமைக்கத் திட்டமிட்டுள்ளேன். அதற்கான நுணுக்கங்களைப் பழகவே மாறுவேடத்தில் ஓவியரிடம் சித்திரம் பயின்றேன்.'' - இராசேந்திரர் சொல்லி நிறுத்தி, இரத்தினவல்லியின் பக்கம் திரும்பி, “இரத்தினவல்லி! சிறந்த நாட்டியமணியான நீ இவ்வாறு சாளுக்கிய நாட்டவருடன் சென்று விடத் திட்டமிடலாமா? உன் தாய் உன்னைச் சிறு வயதிலேயே கோயிலுக்கு விற்று விட்டாள் என்பதை நீ மறந்து விட்டாயா? எவ்வளவு பொன் கொடுத்தாலும் நீ மீளமுடியாது என்பது தெரியுமா? அது மட்டுமல்ல; சாளுக்கிய நாட்டு ஒற்றருடன் நீ ஓடிப் போகத் திட்டமிட்டதற்குத் தண்டனை என்ன தெரியுமா? சோழ மாளிகை வேளத்தில் உன்னைச் சிறையிடுவேன்; காலமெல்லாம் பணிப் பெண்ணாக நீ உழைக்க வேண்டியதுதான். ஓர் நாட்டியமணி சமையற் கூடத்தில் வேலை செய்ய வேண்டும்!''

அரசர் கூறியது கேட்டு இரத்தினவல்லி விம்மினாள்.

‘‘சக்கரவர்த்தி அவர்களே! சோழ நாட்டை விட்டுப் பிரிந்து செல்ல எனக்கு என்றுமே ஆசையில்லை. கனவில்கூட நினைக்க மாட்டேன். இறைவனிடம் காதல் கொண்ட என் மனத்தை இந்த ஓவியரிடம் பறி கொடுத்தேன். காதலுக்குக் கண் இல்லை. அவர் சாளுக்கிய நாட்டு ஒற்றர் என்பது எனக்குத் தெரியாது. காதலா, தாய் நாடா என்றால் நான் நாட்டைத்தான் காதலிப்பேன்; என்னை மன்னித்து விடுங்கள்....அடிமையாக வாழ என் மனம் ஒப்பவில்லை என்பது உண்மையே. விடுதலை பெற்று அவருடன் வாழ நினைத்தது உண்மைதான். அதற்குத் தண்டனையாக என்னை வேளத்தில் தள்ளி விடாதீர்கள். பெருவுடையார் முன்பு நான் என்றும் ஆடிக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து மாற்றிவிடாதீர்கள்.''

இரத்தினவல்லி கோவெனக் கதறியவாறு மன்னர் பாதங்களில் வீழ்ந்தாள்.

“சோழ சக்கரவர்த்திகளே! இரத்தினவல்லியின் மீது நான் கொண்டகாதல்தெய்வீகமானது. அவளைப் பிரிய என்னால் முடியாது. நான் சாளுக்கிய நாட்டிற்குச் செல்ல விரும்பவில்லை; இது சத்தியம்” என்று கூறி மன்னரின் காலில் தடாலென வீழ்ந்தான் நரேந்திரன்.

“நரேந்திரா! எழுந்திரு. ஓர் சிறந்த ஓவியக் கலைஞர், காலில் விழலாமா? மன்னராயினும் வேறு எவராயினும் கலைஞர்கள் அடிபணியக் கூடாது. உம்; உங்களுக்கு ஓர் தண்டனை தந்து தானாக வேண்டும். அதுவும் ஆயுள் தண்டனைதான் சரியானது” என்று கூறிச் சற்று நிறுத்திச் சுற்று முற்றும் பார்த்தார். காவல் வீரர்களை நோக்கி, “திருமந்திர ஓலை நாயகத்தை அழையுங்கள்—

‘‘என்றுமே அடிமையாக வாழத் தங்களை விற்றுக் கொண்ட இராசராசேச்வரத்துப் பெருவுடையார் கோயில் அடிமையான இரத்தின குமாரியின் அடிமைச் சீட்டை முறித்து அவளை விடுதலை செய்கிறேன். இறைவனுக்கு அடிமையாகத் தேவரடியாளாகத் திகழ்பவர்கள் திருமணம் புரிந்து கொள்ளக் கூடாது என்ற நிலையை இன்று முதல் மாற்றுகிறேன். இரத்தினவல்லி திருமணம் செய்து கொண்டே இறைவனுக்குத் தொண்டாற்றட்டும். ஓர் நிபந்தனையின் பேரில் ஓவியர் நரேந்திரன்செய்த குற்றத்தை மன்னிக்கிறேன்.புதிய தலைநகரில் நான் கட்டவிருக்கும் பெரிய கோயிலின் கருவறையைச் சுற்றி ஓவியக்கூடம் ஒன்று அமைக்கப் போகிறேன். அந்த ஓவியக் கூடத்து ஓவியங்களை வரையச் சம்மதித்து, சோழ நாட்டிலேயே தங்கியிருக்க நரேந்திரன் ஒப்புக் கொண்டால் ஒற்றராக இருந்த குற்றத்தைப் பொறுத்தருளி, இரத்தினவல்லியையும் மணம் புரிவிக்கிறேன். உங்கள் விடுதலைக்கு விலை இதுதான்” என்றார்.

“ஆகா...அப்படியே செய்கிறேன்” என்று கூறிய நரேந்திரன் சோழ சக்கரவர்த்தி இராசேந்திர சோழர் பாதங்களில் வீழ்ந்தான். இரத்தினவல்லியும் சேர்ந்து வீழ்ந்து. எழுந்திருக்கும்போது அவள் நரேந்திரனின் கரங்களை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

புன்முறுவலுடன், இராசேந்திர சோழ சக்ரவர்த்தி இரு கரங் கூப்பி ஆசி வழங்கினார்.



# குழலூதி மயக்கிய குருநாதர்

டாக்டர் சீர்காழி எஸ்.கோவிந்தராசன்

தமிழ் கூறும் நல்லுலகிலும், இந்தப் பரந்த பாரத நாட்டிலும் தனது குழலிசையால் அனைவரின் உள்ளங்களையும் கவர்ந்து குழலிசை வேந்தனாக விளங்கிய இசைவள்ளல் திருப்பாம்புரம் என். சுவாமிநாத பிள்ளை அவர்கள் -எனது குரு- ஆசான்- அன்புக்குரிய ஆசிரியர்.

12.9.1899ஆம் நாள் திருப்பாம்புரம் திரு நடராஜ சுந்தரம் பிள்ளைக்கும் திருமதி சிவகாமி அம்மையாருக்கும் புகழ்பெற்ற பிள்ளையாகத் தோன்றியவர் தான் எனது ஆசான். நாதத்துக்கு இந்தப் பிள்ளை சுவாமியாக விளங்கும் என்று நினைத்துத் தான் அவருக்கு சுவாமிநாதன் என்ற பெயரைப் பெற்றோர் இட்டிருப்பார்களோ என்று பலமுறை நான் வியப்புடன் நினைத்ததுண்டு. அது மட்டுமா! தந்தையார் பெயரில் நடராஜரின் பெயரும், தாயாரின் பெயரில் சிவகாமியும், புதல்வரின் பெயரில் சுவாமிநாதன் என்றும் அமைந்தது மற்றொரு விதத்திலும் பொருத்தமே. அப்பனுக்கே பாடம் சொன்ன ஆறுமுகனின் கதையை நினைவூட்டுவதைப் போல் தமது 12 வயதிலேயே இசை வல்லுநராகிய தமது தந்தையே பாராட்டும் வகையில் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்துவிட்டார் என் குருநாதர்.

1949-50ல் நான் தமிழிசைக் கல்லூரியில் ''இசைமணி'' பட்டம் பெறப் படித்துக் கொண்டிருந்தபோது, அங்கு இவர் தேர்வு நடத்தும் அதிகாரியாக வந்தார். அவர் கேள்வி கேட்கும் பாங்கும் நயமும் மறக்க முடியாதது.

அதன்பின் 1951-52ல் சென்னை கர்நாடக இசைக் கல்லூரியில் ''சங்கீத வித்வான்'' பட்டப்படிப்பு படிக்கச் சென்ற போது என்னைப் பல கேள்விகள் கேட்டனர். பலவிதங்களில் பாடச் சொன்னார்கள். ''இந்தப் பையன் குரல் நன்றாக இருக்கிறது! இவனைச் சேர்க்கலாம்'' என்று என்னைச் சேர்க்க தமது ஆதரவைத் தந்தார், அங்கு வைஸ்-பிரின்ஸ்பாலாகப் பணி புரிந்து வந்த திரு சுவாமிநாதப் பிள்ளையவர்கள்.

இது எனது இரண்டாவது சந்திப்பு! இப்படி அவரிடம் இசை பயிலும் மாணவனாகத்தான் சென்றேனே தவிர குருகுலவாசம் செய்வேன் என்றும், அவரே எனக்குக் குருவாக அமைவார் என்றும் நான் நினைத்ததே இல்லை.

அவர் என்னிடம் சில அன்புப் பணிகளை இடுவார். நான் அவற்றைப் பெருமையுடன் செய்வேன்! நான் அவருக்குச் சீடனாக இருப்பேனா என்பதை அவர் அதன்மூலம் பரிசோதித்தாரோ என்னவோ! நானறியேன். அதன்பின், காலாண்டு விடுமுறையின் போது என்னை அழைத்து ''லீவுக்கு சீர்காழி போகப் போகிறாயா?'' என்று வினவினார். நான் அப்போது எனது சித்தப்பாவும் எனக்குப் பலவிதங்களில் உயருவதற்குக் காரணமானவரும் ஆன 'சினிமா உலகம்' ஆசிரியர் திரு. பி.எஸ்.செட்டியார் அவர்களின் இல்லத்திலே தங்கியிருந்தேன். என் சித்தப்பா அவர்களைப் பற்றி இவரும் நன்றாக அறிவார்.

நான் சென்னையிலேயே தான் தங்குகிறேன் என்பதை அறிந்ததும் ''விடுமுறையை வீணாக்காமல் தினம் என் வீட்டிற்கு வந்து நிறையக் கற்றுக் கொள்ளேன்'' என்று வாக்குத் தந்தார். அந்த வாக்கு தான் எனக்குக் கிடைத்த தேவ வாக்கு. அந்த ஒருகணம் தான் எனது இசை வாழ்க்கையின் திருப்பு முனையாகும். தனக்கு நேரமில்லாத காரணத்தினால் பலபேர் அவரிடம் பாடல் கற்க வந்ததும், பெருநிதியைக் கொடுப்பதாகச் சொல்லியும் ஒத்துக் கொள்ளாத அவர், இந்த எளியவனைச் சீடனாக எந்தவிதப் பிரதிபலனும் இன்றி பூர்வஜன்மத் தொடர்பினாலே ஏற்றுக்கொண்ட அந்தக் கணத்தை எண்ணி எண்ணி நெகிழாத நாள் இல்லை.

இப்படித்தான் எனது குருகுல வாசம் தொடங்கியது. இன்று ஒரு கீர்த்தனை சொல்லித் தருவார்; மறு நாள் பாட வேண்டிய கீர்த்தனைக்கு ''நொடேஷன்'' கொடுத்துவிடுவார். மறுநாள் அந்தப் பாடலை முடித்ததும் அதற்கு மறுநாள் பாடவேண்டிய பாடலுக்கு ''நொடேஷன்'' கொடுப்பார். இப்படி எட்டேந்திரர் கீர்த்தனை, மேளராக மாலிகா, தீட்சிதர் கிருதிகள், தியாகராஜ கீர்த்தனைகள், முத்துத்தாண்டவர் பாடல்கள், கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல்கள் போன்ற பலவற்றை வாரி வாரி வழங்கிய இசைவள்ளல் எனது ஆசிரியர்.

''நல்ல பாத்திரமாக இருந்தால் உடனே பிச்சை போட்டு விட வேண்டும். ஓட்டைப் பாத்திரத்தில் போட்டுவிட்டால் என்ன பிரயோசனம்?'' என்று அவர் தந்தை கூறியதாக அடிக்கடி நினைவுபடுத்தி,தனது இசைக் கருவூலத்திலிருந்து மிகவும் தெளிவாக - நயமாக - மனதில் பதியுமாறு சொல்லித் தந்தார். அவரிட்ட பிச்சைதான் எனது வாழ்க்கையின் அஸ்திவாரம் எனலாம்.

எனது சித்தப்பாவின் ஆசியாலும், அன்பாலும் ஆர்வத்தாலும் இராஜாஜி தம்புராவை தமிழிசையில் பாடி, பரிசாக நாமக்கல் கவிஞர் அவர்கள் கையாலே பெற்றது உண்மையெனினும், அதன் பின்னே மியூசிக் அகாடமி நடத்திய வெள்ளி விழாவிலே தமிழில் அபூர்வ கீர்த்தனைகள், தியாகராஜரின் அபூர்வ கிருதிகள், ராகம் தானம் பல்லவி ஆகிய மூன்று போட்டிகளிலும் முதன்மையாகத் தங்கப் பதக்கங்கள் பெற்றுத் தந்தது எனது குருநாதரின் ஆசிதான். ஆர்.ஆர்.சபாவில் மும்மூர்த்திகளின் கிருதிகளைப் பாடி, தங்கப் பதக்கம் பெற வைத்ததும் அவரின் ஆசியே.

என்னைத் தன் மகனாகவே எண்ணி வந்த பெருந்தகை அவர்.

ஒரு தடவை கல்கத்தா நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தோம். ஒரு வீட்டில் தங்க ஏற்பாடு, அவருக்குச் செய்ய வேண்டிய அன்புப் பணிகளை நான் செய்ய முயன்ற போது, அங்கு வீட்டிலுள்ளவர்கள், ''ஐயாவின் துணிகளைத் தோய்ப்பது போன்ற வேலைகளையெல்லாம் ஐயாவின் பிள்ளையேவா செய்வது? நாங்கள் செய்கிறோம்?'' என்று கூறி நான் எந்தப் பணியையும் செய்ய விடாமல் தடுத்துவிட்டனர். என்னை அவர் தனது பிள்ளையாகவே அங்கே சொல்லி வைத்துள்ளார், என்ற உண்மையை அறிந்தபோது நான் மெய் சிலிர்த்தேன்! இந்த நிகழ்ச்சியை அவரிடம் சொன்னபோது அவரிடம் வெளிப்பட்டது ஒரு சிறு புன்னகைதான்.

பம்பாய்க் கச்சேரி ஒன்றில் நடந்த நிகழ்ச்சி என் உள்ளத்தை விட்டு நீங்காத ஒன்றாகும். பம்பாய்ப் பயணம் தொடங்குகிறது. முதல் வகுப்பில் அவர் பயணம் செய்கிறார். அப்போது மின் விசிறிக்கு மேலுறை கிடையாது. வெளிப்படையாகவே சுற்றிக் கொண்டிருக்கும். எதிர்பாராமல் அவரது கைவிரல்கள் பட்டு சரியான அடி! நான்கு விரல்களிலும் இரத்தம் கசிந்து அவர் சட்டையெல்லாம் ரத்தக்கறை படிந்து விட்டது. அங்கிருந்தவர்கள் என்னை அழைக்கவா என்று கேட்டதற்கு ''வேண்டாம்! அவன் பயந்து விடுவான்'' என்று கூறி தடுத்துவிட்டார். அடுத்த பெட்டியில் இருந்த நான் 'கல்யாண் ஸ்டேஷன்' இறங்கி அவரிடம் பேச வந்தபோது திடுக்கிட்டேன்! பதறி விட்டேன்! 'ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை!' என்று அவர் என்னைத் தேற்றினார்.

பம்பாய் சென்றதும் திரு.முருக பூபதியை மிருதங்கம் வாசிக்க வைத்து ஒரு கீர்த்தனையை வாசித்துக்காண்பித்த தீரர் அவர். அதன்பின் ஒரு இஞ்செக்ஷன் மட்டும் போட்டுக் கொண்டார் அவர். அவ்வளவுதான். அன்று இரவு பம்பாய் ஷண்முகானந்தா சபை விழாவில் அந்த அடிப்பட்ட விரல் களை வைத்துக் கொண்டே மிகுந்த வலியைத் தாங்கிக் கொண்டே 5 மணி நேரம் புல்லாங்குழல் கச்சேரியை அமுத கானமாகப் பொழிந்து தள்ளிவிட்டார். சபையினர் மெய் மறந்தனர். கேள்விப்பட்டவர்கள் கண்களிலெல்லாம் அன்பு நீர் பெருகியது. குழலூதிட விரல்கள் எத்துணை அவசியமானது? அடிபட்ட விரல்களைக் கொண்டு வாசிக்க முடியுமா? வாசித்தார் அவர்!

நகைச்சுவை நடிகர் திரு கே. சாரங்கபாணி அவர்கள் எனது ஆசிரியரைப் பற்றிக் கூறும்போது ''எனது அத்தானாகிய சுவாமிநாதப்பிள்ளை யாரென்று நினைக்கிறீர்கள்? அவர் ஒரு சங்கீத வல்லபாய் படேல்'' என்று அடிக்கடி கூறுவார். அன்று அது நிருபணமாயிற்று. எத்தனை நெஞ்சுரம்! கச்சேரியைத் தள்ளி வைத்து ரசிகர்களை வருந்தச் செய்யக் கூடாது என்ற நல்லெண்ணம் இருந்ததால்தான் அன்று அப்படி வாசித்தார். அடேயப்பா! மாபெரும் சோதனையில் அவர் நிகழ்த்திய மகத்தான சாதனை அது!

கச்சேரி முடிந்ததுமே அவரது விரல்கள் வீங்கிவிட்டன. கடுமையான ஜுரம். ஒருமாத காலம் ஆயிற்று அந்த விரல்கள் குணமாவதற்கு. அப்போதெல்லாம் உணவு கூட ஊட்டித்தான் விட வேண்டும். கையால் பாவம் தொடுவதற்குக் கூட முடியாத படி ரணமாக இருந்தது. அந்தச் சமயத்தில் அவருக்கு மகனாகவே இருந்து ஊட்டி விட்டேன் என்பதை நினைக்கும்போது விழிகளில் கண்ணீர் பெருகுகிறது.

கோனேரி ராஜபுரம் வைத்திய நாத பாகவதர் அவர்களைப் பற்றி அடிக்கடி நினைவுகூர்வார். வீணை சாம்பசிவ ஐயர், த்வாரம் வெங்கடசாமி நாயுடு (அரியக்குடி, செம்பை) போன்ற பல

சோலை மலரொளியோ—உனது
சுந்தரப் புன்னகைதான்!

—மகாகவி பாரதியார்



இசைப் பெரியவர்களுடன் அவரின் தொடர்பு இருந்தது. 1953ல் சென்னை சங்கீத வித்வத் சபை அவருக்குச் ''சங்கீத கலாநிதி'' என்று பட்டம் வழங்கித் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது.

தற்போது ''ஸ்டேட்ஸில்'' பணி புரியும் திரு.டி.விஸ்வநாதன் அவர்கள், அவருடைய சீடராவார். திருச்சி வானொலி நிலையத்தில் பணியாற்றிய திரு.சுப்பிரமணிய தேசிகரும் அவரது சீடரே. காலஞ்சென்ற திரு.டி.வி. நமச்சிவாயம், திரு.எஸ்.நரசிம்மலு ஆகியோரும் அவரது மாணவர்களே. யாருக்காவது அவர் உதவி செய்ய வேண்டி வந்தால் அதற்காக அவர் படும் சிரமமும், அடைகின்ற பரிதவிப்பும் சொல்லி முடியாது. கருணைக்கடல் அவர் என்றால் அது மிகையாகாது.

திரையில் முதன் முதலில் பொன் வயல் படத்தில் ''சிரிப்புத் தான் வருகுதையா'' என்ற பாடலை நான் பாடிட அவரிடம் அனுமதி கேட்டபோது, அவர் மனமாரப் பாராட்டி அன்புடன் அனுமதி தந்து ''நல்ல பாடல்களாகப் பாடு'' என்றுகூறிய ஆசிரியரை என்னால் மறக்க முடியாது. கர்நாடக இசையிலும், திரை இசையிலும் இரண்டுக்கும் அவர் அளித்த ஆசிதான் இரு துறைகளிலும் எனக்கு நல்ல பெயர் வாங்கித் தந்துள்ளது என்பதை என்றும் நான் மறவேன்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் அவருக்கு 1951ஆம் ஆண்டு 'வேய்ங்குழல் நாயகம்' என்றபட்டத்தை அளித்தது. முத்துத்தாண்டவர் பாடல்கள், பாலகவி ராமநாதன் செட்டியாரின் தமிழிசைப் பாடல்கள், கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல்கள் ஆகிய பலவற்றிற்கு ஸ்வரப்படுத்தி-மெட்டமைத்து - இசை நூல்களைத் தாளக் குறிப்புடன் வெளியிட்டு இசை உலகிற்குச் சிறந்த தொண்டினைச் செய்தார்.

1942ஆம் ஆண்டு முதல் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் தலைமை இசைப் பேராசிரியராகவும், 1949 முதல் 1961 வரை சென்னை கர்நாடக சங்கீத மத்தியக் கல்லூரியில் வைஸ்-பிரின்ஸ்பாலாகவும் பணியாற்றியவர்.

1952ல் சென்னை இண்டியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டியினர் 'சங்கீதகலாசிகாமணி' என்ற பட்டத்தை அளித்தனர். 1961ல் மத்திய அரசால் ஜனாதிபதி விருதும் பெற்றார்.

அவரது வாழ்க்கையும் இசை மயமாகவே நிறைவு பெற்றது. ஆம். 1961ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8ஆம் தேதி இசைக் கல்லூரியில் நான்கு மணி வரை சிறப்பாகப் பணியாற்றிவிட்டு வீட்டுக்கு வந்தவர், சில நிமிடங்களில் இதயநோயால் இறைவன் திருவடியை அடைந்தார். தனது வாழ்க்கையில் கடைசி நிமிடங்கள் வரை இசைப் பணியில் தம்மை அர்ப்பணித்தவர் எனது ஆசிரியர் என்று எண்ணும்போது பெருமிதத்தால் நெஞ்சம் விம்முகிறது.

அவரது சாதனைகள் இசைக் கடலுக்குக் கிடைத்த கலங்கரை விளக்கம். அவரது இசைக் கச்சேரிகளில் வந்து விழுகின்ற சங்கதியும், காலப் பிரமாணமும், ஸ்வரப் பிரயோகமும் நீதிபதியின் 'ஜட்ஜ்மெண்டுக்கு' நிகரானது. நியாயமானவராகத் தீர்ப்பு இருக்கும். கலப்படம் இருக்காது; பளிச்சென்று இருக்கும்; குழப்பம் தலைகாட்டாது.

குருநாதர் வாழும்போதே அவரைப் பற்றிய 'குருவணக்கப் பாடலை' எனது சித்தப்பா திரு. பி.எஸ்.செட்டியார் அவர்களின் அன்புக் கட்டளைப்படி பாட ஆரம்பித்தேன். அந்தப் பாடலை இயற்றியவர் கவிஞர் கோ.கந்தசாமி அவர்கள்.

என்குரு நாதன்—
வேய்ங்குழல் வேந்தன்
இசையறி வூட்டிய ஞான
போதன்
(என் குருநாதன்)
அன்னை தந்தை, அதன்
பிறகவரே—
அகண்ட உலகிலே எனக்கு
வாழ்வளித்தவரே
(என் குருநாதன்)
நக்கீரரைப்போல சொற்கூறும்
பண்பான்-நற்
காதலைக் காட்டிலும் கலை
வேண்டுமென்பான்
என்கீத ஞானம் அவர்தந்த
வாழ்வு
என்னுள்ளம் என்றும் அவருக்
குத் தாழ்வு.
(என் குருநாதன்)

சங்கீத கலாநிதி - சங்கீத கலா சிகாமணி - திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளையவர்களின் புகழ் இசை உலகம் உள்ளளவும் வாழும் - வளரும்.


அண்ணாமலை அரசரும், முத்தையவேளும் கட்டிக்காத்த சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே எனது குருநாதர் வகித்து வந்த இசைத்துறைத் தலைவர் பொறுப்பிலே இன்று இந்த அடியவன் இருக்கிறான் என்றால் இதற்குக் காரணம் குருவருளும் திருவருளும்தானே!

## இது சரியா?



நாமின்றி என்ன செய்ய இயலும் என்ற ஓர் எண்ணம், நம்மால்தான் எல்லாம் என்ற எண்ணத்திலிருந்து பிறக்கிறது. பிறகோ நாமில்லாதபோது எது தான் இயங்கும் என்று தோன்றும். பிறகு நாமின்றியும் ஒன்று இயங்குவதா, அதை நாம் விட்டு வைப்பதா என்று தோன்றும். பிறகு இயங்குவதை ஒழித்தாக வேண்டும் என்ற அரிப்பு ஏற்படும்; அது இயலாது என்ற ஐயப்பாடு குறுக்கிடும். குறுக்கிட்டதும் நாம் மட்டும் போதாது, ஒத்த கருத்துடைய மற்றவர்களின் துணையை நாடவேண்டுமென்று எண்ணம் பிறக்கும். அது வளர்ந்திடின் வேறோர் மொத்தம் (கூட்டமைப்பு) ஏற்படும். ஏற்பட்டதும் அந்த மொத்தத்தில் நம்நிலை என்ன; பங்கு என்ன; என்ற எண்ணம் எழும். எழுந்ததும் பழைய கதையேதான்; நம்மால்-நம்மாலேதான்-நம்மால் மட்டும்தான் - நாமின்றி என்ன ஆகும்-நாம் நாமாகி விடுவோம்-என்ற இந்தக் கட்டங்கள் வடிவமெடுக்கும். இது சரியா?

—பேரறிஞர் அண்ணா



சென்னையில் 15.1.86 அன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்குத் திருவள்ளுவர் விருது அளித்துப் பொன்னாடை போர்த்தி ரூ. 10 ஆயிரம் நிதி வழங்கிச் சிறப்பித்தார்.






ஜீவா போக்குவரத்துக் கழகம் ரூ. 4¾ இலட்சம் செலவில் விமான முகப்போடு தயாரித்துள்ள நவீன சொகுசுப் பேருந்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் (21.1.86) பார்வையிட்டார். குறைவான எரிசக்தியோடு இயங்கக் கூடியதும் 35 பேர் உட்காரும் வசதியுடையதுமான இந்தப் பேருந்தின் அமைப்பை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் விளக்கினார்.

# பெருமைசால் தமிழ்க்குடி

மண்திணி ஞாலத்து முன்பே தோன்றி,
மூத்த குடி,முது பெருந்தமிழ்க் குடியே !
மூவாத் தமிழ்மொழி நாவா ரமுதாய்ப்
பேசி மகிழும் பெருமைசால் தமிழ்க்குடி ;
மனிதநா கரிகம் வளர்த்த தாய்க்குடி !
எண்ணரும் இலக்கியம், இன்புறு கலைகள்,
மண்ணில் வளர்ந்து சிறந்திடு காதல்,
இன்பஅன் பிற்குத் துணையா யிலங்கிடும்
இறைமைக் கொள்கை இவைஒருங் கிணைந்து
வளர்ந்துயர்ந் திட்ட மாண்பார் தமிழ்க்குடி!
தமிழ்க்குடி தழைக்கப் பொங்கலோ, பொங்கல்!
தமிழ்க்கலை வளரப் பொங்கலோ, பொங்கல்!
வளம்கொழித் திடச்செயும் வற்றாக் காவிரி
பொருநை வையைக்குப் பொங்கலோ, பொங்கல்!
சுவைசேர் உணவினைத் தந்துயிர் தழைக்கச்
செய்,உழ வர்க்குப் பொங்கலோ, பொங்கல்!
கழனியில் உழும்பக டடன்பால் பொழிந்து
வழங்கும் பசுவுக்குப் பொங்கலோ, பொங்கல்!
தாயாய்த் தமிழகம் தாங்கிடும் தமிழ்நாட்டு
அரசு வாழ்ந்திடப் பொங்கலோ, பொங்கல்!
புவியினில் இன்பம் சிறந்து பொங்குக!
மனிதர்க ளிடையே உறவு கரும்புபோல்
இனிமையாய் வளர்க! எழில்நிறை மஞ்சளும்
இஞ்சியும் போல்பிணி இலாதநல் வாழ்க்கையும்
பொற்பார் இன்பப் புனித வாழ்க்கையும்
சிறந்திடப் பொங்குக! பொங்கலோ, பொங்கல்!


-தவத்திரு குன்றக்குடி அடிகளார்



மத்திய-மாநில உறவுகள் குறித்து ஆராயும் குழுவின் தலைவர் நீதிபதி திரு. சர்க்காரியாவிடம் மாண்புமிகு தமிழக சட்ட மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி தமது கருத்துக்களை 27.12.1985 அன்று தெரிவித்தார்.

ஹ்யூ கேசியைத் தலைவராகக் கொண்ட சீனநாட்டைச் சேர்ந்த நாடாளுமன்றக் குழுவினர் தமிழக சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் அவர்களை, தலைமைச் செயலகத்திலுள்ள அவரது அறையில் 7.1.1986 அன்று சந்தித்து உரையாடினர்.





ஜெர்மனி நாட்டுக் குடியரசுத் தூதர் திரு ஜி. ஸ்கயோடெல், 17.12.1985 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

# படமும் செய்தியும்



மாண்புமிகு ஜம்மு-காஷ்மீர் துணை முதல்வர் திரு டி. தாகூர், மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்களை 30.12.1985 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்.



மாண்புமிகு மேற்கு வங்கத் தொழிலமைச்சர் திரு நிர்மல்போஸ் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக தொழிலமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் கன்னிமாரா ஓட்டலில் விருந்தளித்தார். மாண்புமிகு தமிழக வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு என். நல்லுசாமி, மாண்புமிகு ஆயத்தீர்வை, மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் ஆகியோர்கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு, அதிக விகிதத்தில் கொடிநாள் நிதி திரட்டியமைக்காக அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவரும் இன்றைய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநருமான திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப., இப்போதைய புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரிஜேஸ்வர்சிங் இ.ஆ.ப., இருவருக்கும் மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் 7.1.1986 அன்று கேடயம் வழங்கிச் சிறப்பித்தார்.



இளமை கொழிக்கும் இனிய சிறுவர்
வளமிழத்தல் நன்றோ வறண்டு?

திரு. வி. க.



# மாணவர் பக்கம்

## லோகமான்யர்

பாலகங்காதரதிலகர். 'சுயராச்சியம் எனது பிறப்புரிமை' என்று முழங்கிய பாரதத்தாயின் தவப்புதல்வர். இந்திய வரலாற்றிலே திலகர் காலம் என்று பொன்னெழுத்தில் பொறிக்கப்படும் அளவிற்கு ஒரு காலகட்டத்தை உருவாக்கியவர். அஞ்சா நெஞ்சமும், அறிவும், ஆற்றலும் கொண்ட மாபெரும் தலைவர். ஒரு தேசத் தலைவனுக்குரிய அனைத்துக் குணங்களை தன்னகத்தே கொண்டிருந்த பெருமகனார்-அனைத்துத் தொண்டர்களாலும், தலைவர்களாலும் மதித்துப் போற்றப்பட்டு வந்தவர்.



விடுதலை இயக்கப் பணிகளும், சமூகப் பணிகளும், எழுத்துப் பணிகளும், சமரசப் பணிகளும் அவரை ஒரு இணையில்லாத் தலைவராகத் திகழச் செய்தன.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குடும்ப நலனுக்காகச் சொத்து சேர்ப்பதில் மூழ்கியிருந்த சமயத்தில் திலகர் தம்மிடம் இருந்த அனைத்தையும் இந்தியாவில் ஆங்கிலேயஆட்சியை எதிர்க்கப் பயன்படுத்திய ஒரு இணையற்ற மனிதராகத் திகழ்ந்தார்.

திலகர் தமக்கு விருப்பமான கணிதத்தையும், வானசாத்திரத்தையும் தியாகம் செய்து விட்டு அரசியலில் புகுந்து நாட்டை உருவாக்கப் பாடுபட்ட சரித்திர வீரராகக் காட்சியளித்தார்.

அரசியல் சுதந்திரத்திற்கு நவீன கல்விமுறை அவசியம் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியென அறிந்திருந்த திலகர், அதற்கேற்ற முறையில் கல்வி அமைய வேண்டுமென வற்புறுத்தினார். அதனால் 'டெக்கான் கல்விச் சங்கத்தை' உருவாக்கினார்.

பேனாவின் முனை, வாளின் முனையைவிட கூர்மையானது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த திலகர், பத்திரிகைத் துறையில் தம்மிடம் சிறந்த வல்லுநர்கள் இல்லாத போதும் துணிந்து மராத்தியில் 'கேசரி' என்ற பத்திரிகையையும், ஆங்கிலத்தில் 'மராட்டா' என்ற பத்திரிகையையும் துவக்கி சேவை செய்தார். அதை அச்சிடும் தொழிலாளிக்குச் சம்பளம் கொடுக்கும் நிலையில் அவரது பொருளாதார நிலை இல்லாததால் அப்பணியையும் அவரே மேற்கொண்டார்.

அரசியல், சமூக, சமரச, எழுத்துப்பணிகளைத் திறம்படச் செய்து ஒரு பழிச்சொல் இல்லாத வாழ்க்கையை நடத்தியதாலேயே இன்றளவும் 'லோகமான்யர்' என்று போற்றப்படுகிறார்.

—ஜி. காமேஸ்வரி

12-ஆம் வகுப்பு, தேசிய ஆங்கிலப் பள்ளி, சென்னை.

## அறிவுச்சுடர்

* இரத்தம் தண்ணீரைப்போல் ஆறு மடங்கு கனமானது.

* வெட்டுக்கிளியின் இரத்தம் வெள்ளை நிறமானது.

* சூரியனின் ஒளி பூமியை வந்தடைவதற்கு ஆகும் காலம் எட்டு நிமிடங்களாகும்.

* 'திபெத்' நாட்டில் வளரும் ''யாக்'' என்ற எருமைகளின் பால் இளஞ் சிவப்பு நிறமாக இருக்கும்.

* சிந்தனையின் வேகத்தைக்கூட அளந்து விட்டார்கள். அதன் வேகம் மணிக்கு 150 மைல்களாகும்.

* கடிகாரத்தின் நிறை அதன் சாவி கொடுத்த பிறகு அதிகமாகிவிடும். சாவியெல்லாம் தீர்ந்த பிறகு அதன் நிறை குறைந்து விடும்.

* பிராணிகளிலேயே அதிக குரல் வளம் உடையது முதலையாகும். 'அலிகேட்டர்' என்ற முதலை பெருங்குரலில் சத்தமிட்டால் அது ஒரு மைல் தூரம் வரை கேட்குமாம்.

(ஆதாரம்: திரு வாண்டுமாமா எழுதிய 'இன்னும் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற நூல்.)

ஆ. பூமிநாதன்,
முதலாண்டு 'பி' பிரிவு,
அரசுத் தொழில் நுட்பக் கல்லூரி,
கோணம் நாகர்கோவில்-4.


## விளையும் பயிர் :


படிப்போடு நின்று விடாமல், கதை, கட்டுரை, கவிதை எழுதுவதிலும், நாடகம், பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றும் பாராட்டுதல்கள் பெற்ற இம்மாணவர்களை நாமும் பாராட்டுவோம்!



**இரா. இளஞ்செழியன்**
முதறிவியல் இரண்டாமாண்டு தாவரவியல்
புனித சூசையப்பர் கல்லூரி
திருச்சி

**சுவாமி. கலைச்செல்வன்**
இரண்டாமாண்டு கணிதம்
அ.வி.வா.நி. திரு புட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சை மாவட்டம்





**அண்ணா அன்பழகன்**
எம்.ஏ. பொருளியல் இரண்டாமாண்டு
பூண்டி புட்பம் கல்லூரி
தஞ்சை மாவட்டம்

**ச. பாலமுருகன்**
பதினோராம் வகுப்பு
அரசினர் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி
காட்டூர், திருச்சி.




**வளரும் எழுத்தாளர்கள் வாழ்க!**

## புத்தகம் படிக்கும் இயந்திரம்

பார்வை இல்லாதவர்களுக்கு, அவர்கள் விரும்பும் புத்தகங்களைப் படித்துக் காட்டக்கூடிய நூதனமான இயந்திரம் ஒன்றை ஜப்பானில் தயாரித்திருக்கிறார்கள். வைத்திய பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுச் சாதனை ஆராய்ச்சி நிலையம் ஜப்பானில் இருக்கிறது. அந்த நிலையந்தான், புத்தகம் படிக்கும் இயந்திரத்தை உருவாக்கி இருக்கிறது.

புத்தகத்தில் இடம் பெற்றுள்ள வரி வடிவ எழுத்துக்களையும், அவை ஒன்று சேர்ந்து ஏற்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களையும், ஒலி வடிவம் பெறச் செய்கிறது. படிக்கும் வேகத்தை, தேவைக்கேற்ப அதிகப்படுத்திக் கொள்ளவோ குறைத்துக் கொள்ளவோ முடியும். சில பக்கங்களைப் படிக்க வேண்டாம் என்று இந்த இயந்திரத்திடம் 'சொல்லி' விட்டால்; அதன்படியே அந்தப் பக்கங்களைப் படிக்காமல் விட்டுவிடும். இப்போது தயாரிக்கப்பட்டுள்ள படிக்கும் இயந்திரம், 'பாக்கெட்-சைஸ்' என்று சொல்லப்படும் சிறிய புத்தகங்களை மட்டுமே படிக்கும். அதன் அமைப்பு அப்படி இருக்கிறது. மேலும் ஒரு பக்கத்தைப் படிக்க, இந்த இயந்திரத்திற்கு 25 நிமிட நேரம் தேவைப்படுகிறது. இந்த இயந்திரம் ஒன்றின் விலை ரூ. 15 லட்சம் ஆகிறது. ஆனால், ஜப்பானில் உள்ள 3,36,000 பார்வையற்றோர், இதனால் எதிர்காலத்தில் பெரிதும் பயனடைவார்கள்.

— ஜப்பான் செய்தி



## குற்றாலம் போவோம்!

குற்றாலத்தைப் பாருங்கள்
குளித்து மகிழ வாருங்கள்
வற்றா அருவி அதுவாம்பார்
வரும் நோய் தன்னை தீர்க்கும்பார்!

ஐந்து அருவி வீழுதுபார்;
அழகு இன்பம் கொள்ளை பார்
பைந்தமிழிசை பாடும் பார்;
பருகும் செவிக்குத் தேனாம்பார்!

முக்கனி எங்கும் இருக்கும்பார்
முடிமீதேறி விளையாடி
சொக்கும் கடுவன் மந்தியுந்தான்
சுவைத்து ஆடும் காட்சி பார்!

வாச மலரை சந்தனத்தை
வாரி வந்து கொட்டுதுபார்
வீசும் தென்றல் மணம் நுகர
விரும்பி ஓடி வருவீரே!

—தே. பூங்காவனம்



# நூல் நயம்

## வேளாண்மைக் களஞ்சியம்

**ஆசிரியர் :** இரா. நேதாஜி
சீத்தாராமன்
கோ. அர்ச்சுனன்

**வெளியீடு:** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-98.

**விலை :** ரூ. 25. **பக்கம்:** 352

'உழவே தலை' என்ற வள்ளுவப் பெருந்தகையின் கருத்திற்கிணங்க, உழவின் பெருமை, நூல் முழுவதும் பேசப்படுகிறது.

தானியப் பயிர்கள், பயறுகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பணப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள், பழ வகைகள், மலர்ப் பயிர்கள், தீவனப் பயிர்கள், மலைத்தோட்டப் பயிர்கள், காளான்கள், பட்டுத்தொழில் இப்படி பல்வேறு பயிர் வகைகள் குறித்து அவற்றை எப்படியெல்லாம் பயிரிட்டால் நல்ல மகசூலைக் காணலாம்—விளைச்சலைப் பெருக்கலாம்—செல்வத்தை அடையலாம் என்பன போன்ற விளக்கங்களை மிகத் தெளிவாகக் கூறுகிறது இந்நூல். உதாரணமாக நெல். அது பயிரிட ஏற்ற பட்டங்கள், விதையளவு, விதை நோக்கி, நாற்றங்கால், நாற்றுகளும் நடவு முறையும், உரமும் உரமிடுதலும்—இப்படி பட்டியல் போட்டுப் பாமரரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் உண்மையில் ஒரு வேளாண்மைக் களஞ்சியமாகவே விளங்குகிறது.

## தொழிற்சங்க இயக்கமும் தொழிலாளர் சட்டங்களும்

ஆசிரியர் : கே. எம். சுந்தரம்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-98.

விலை: ரூ 10. பக்கம்: 174

தொழிற்சங்கம் தொடர்பான சட்டங்கள், அவற்றின் வரலாறுகள் அவை கொண்டு வரப்பட்ட பின்னணி முதலானவை இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

அன்றாடத் தொழிற்சங்க இயக்கப் பணிகளுக்கான இன்றியமையாத 25 சட்டங்களை அலசி ஆராய்கிறது இந்நூல். சட்ட ஞானத்தை வழங்கும் இந்நூலுக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அணிந்துரை நல்கியுள்ளார். தொழிற்சங்க இயக்கத்தில் பல்லாண்டுகள் அனுபவம் பெற்ற திரு. கே. எம். சுந்தரம் இந்நூலைத் திறம்பட எழுதியுள்ளார்.

## செல்வம் கொழிக்கும் சிறு தொழில்கள்

**ஆசிரியர் :** தாமரைச் செல்வி
**வெளியீடு:** புத்தகப் பூங்கா 29, நல்லண்ண முதலி தெரு, இராயப்பேட்டை சென்னை-14.

**விலை:** ரூ. 12. பக்கம்: 152.

சுயவேலை வாய்ப்புக்கு உதவிடும் வகையில் இந்நூலில் ஏராளமான சிறுதொழில்கள் பற்றிய விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

மிட்டாய், இங்க், சோப்பு, பாலீஷ், ரப்பர் ஸ்டாம்பு, சர்பத், ரொட்டி, பிஸ்கட், ஊதுவத்தி, பற்பொடி, பவுடர் இப்படிப் பல சிறுதொழில்கள் பற்றிய விளக்கங்களும், செய்முறைகளும், தொழில்தொடங்கக் கடன்வசதி பெறும் வழிவகைகளும் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

## அன்பு அகிம்சை தூய்மை

அருளியது: சுவாமி சிவானந்தா
தமிழாக்கம்: ஆர். வரதராஜன்

வெளியீடு : தெய்வீக வாழ்க்கைச் சங்கம், இராசிபுரம், சேலம் மாவட்டம்

விலை : ரூ. 4. பக்கம்: 102

சுவாமி சிவானந்தரின் அருள் மொழிகள் - அன்புமொழிகள் - பொன்மொழிகள் நூலை அலங்கரிக்கின்றன. அன்பின் பெருமையையும், அகிம்சையின் ஆற்றலையும், தூய்மையின் முக்கியத்துவத்தையும் சுவாமிகள், மனத்தில் பதியும்படியாக அழகாகக் கூறுகிறார்.

''நாம் அனைவரும் ஒரே மரத்தின் பழங்கள். ஒரே கிளையின் இலைகள். இந்த உலகில் தெரியாதவர்களும், விரோதிகளும் எவருமில்லை. பரிணாம வளர்ச்சியில் ஒவ்வொருவரும் கடவுள் தான்' இது சுவாமி சிவானந்தரின் பொன்மொழி. இப்படி நூல் முழுவதும் நல்ல கருத்துகள் விரவி உள்ளன. அறிவு நலம் பெற இந்நூல் பெரிதும் உதவும்.

—பி. வி. கிரி

## விநாயகர் கதை

**ஆசிரியர் :** மயிலைத்தொண்டன்
**வெளியீடு:** தமிழ் மணி பதிப்பகம் 107-ஏ, பெரியார் பாதை (மேற்கு) சூளைமேடு, சென்னை-600094


விலை: ரூ. 10 பக்கம் : 144

முழு முதற் கடவுள் என்றும், வேழமுகத்தோன் என்றும் போற்றி வணங்கப்படும் விநாயகப் பெருமானைப் பற்றிய வரலாற்று நூல் இது. 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று அவ்வையார் கேட்டது விநாயக




## சென்ற இதழில்...

கோவையில் நடைபெற்ற10-வது தேசிய பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை 27.12.1985 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் துவக்கி வைத்த காட்சியும் சென்னை அறிஞர் அண்ணா நகரின் நுழைவாயிலில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1.1.1986 அன்று திறந்து வைக்கப்பெற்ற பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவு வளைவும் 16.1.86 தமிழரசு பொங்கல் மலரின் இருபகுதிகளின் அட்டைகளை அலங்கரித்தன.




ரிடம்தானே? நூல் முழுவதும் விநாயகரின் பெருமை பேசப்படுகிறது. விநாயகர் சிறப்புமிகு தத்துவங்கள், பாலவிநாயகர் அவதார மகிமை போன்ற விளக்கங்களும், புராணக் கதைகளும் சுவைபட எழுதப்பட்டுள்ளன. குழந்தைகளும், பெரியவர்களும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய ஏராளமான செய்திகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

—பி. வி. ஜி.

### காப்புறுதிச் சட்டம்

ஆசிரியர்: சோ.சேசாசலம்

வெளியீடு: திருமகள் நிலையம்,
55,வெங்கட் நாராயணா ரோடு, தியாகராயநகர்.
சென்னை-600 017

பக்கம் 136 விலை ரூ. 9.50

''சட்டம் ஓர் இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு'' என்று பேரறிஞர் அண்ணா ஒருமுறை எழுதினார். அந்தச் சட்டங்களை ஏழை எளியவர்களும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற முறையிலே சட்ட நூல்கள் தமிழில் உருவாக்கப்படுகின்றன.

காப்புறுதி என்பது தற்காலத்தில் எல்லாத் துறையிலும் காணப்படுகிறது. காப்புறுதியினால் ஏற்படும் நன்மைகளை அறிந்து கொண்டவர்கள் தங்கள் பொருட்களை-இடங்களை காப்புறுதி செய்கின்றனர். நெருப்பினின்றும் பாதுகாப்புக் கிடைப்பதற்கும் காப்புறுதி செய்யப்படுகின்றது.

காப்புறுதியின் வகைகள், அவற்றின் சிறப்பம்சங்கள், அவற்றால் விளையும் நன்மைகள், பொதுக் கொள்கைகள், தவணைக் கட்டணம் ஆகிய பற்பல செய்திகளையும், காப்புறுதிச் சட்டத்தின் பிரிவுகளையும் நூலாசிரியர் எளிய, இனிய தமிழில் எழுதியிருக்கிறார்.

தாம் எடுத்துக் கொண்டுள்ள பொருளுக்கு ஏற்ற வழக்குகளையும் சான்றுகளையும் நூல் முழுதும் ஆசிரியர் எடுத்துக்காட்டியிருப்பதிலிருந்து அவரது கடுமையான உழைப்பு தெளிவாக்கப்பட்டுள்ளது. தாய்மொழி மூலம் சட்டக்கல்வி கற்பிக்கப்படும் திட்டத்திற்கு இந்நூல் பயன்படக் கூடும்.

—தமிழ்ப்பித்தன்

### ஆரிபு..

ராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு சிற்றூர் வரிசை இபுராகிம் என்பவரின் மகன் ஆரிபு. சிறு அரிசி ஆலை ஒன்று இங்கே உள்ளது. இதில் ஆலையை ஓட்டும் ஓட்டுநராக ஆரிபு பணியாற்றி மாதம் 90 ரூபாய் சம்பாதித்து வந்தார். ஏழு பேரைக் கொண்ட பெரிய குடும்பம் இவருடைய குடும்பம். குடும்ப விளக்கு எரிவதற்குத் திண்டாடியது.

தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆரிபு என்னும் அந்த இளைஞரை அரவணைத்தது. இந்தத் திட்டத்தின் வாயிலாக 5,000 ரூபாய் கடன் வாங்கி, சைக்கிள் கடை ஒன்றை அங்கேயே துவக்கினார் ஆரிபு. அரசு மானியம் 1,666 ரூபாய். மாதம் ஒன்றுக்குச் சராசரி 600 ரூபாய் வருமானம் இப்போது இவருக்குக் கிடைக்கிறது. இதில் 150 ரூபாய் வங்கிக் கடன் தவணையை ஒழுங்காகச் செலுத்தி வருகிறார்.

### ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல் விதிகள்.

ஆசிரியர்: சு.புகழேந்தி

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, மயிலாப்பூர்,
சென்னை-600 004.

பக்கம் 107 விலை ரூ.6.00

ஜனநாயக நாட்டில் தேர்தல்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. வயதுவந்த அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இன்னின்னார் தான் தேர்தலில் வேட்பாளராக நிற்க முடியும் என்ற விதியும் இருந்தது. தற்போது 21 வயது பூர்த்தியானவர் ஊராட்சித் தேர்தலில் நிற்கலாம் என்ற விதி உள்ளது.

ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல் விதிகள் குறித்து வேட்பாளர்களும், பொதுமக்களும் தெரிந்துக் கொள்ளும் வகையிலே இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதுவழிகாட்டிநூல் வரிசையிலே வைத்து எண்ணப்படும் தகுதிபடைத்திருக்கிறது.

வாக்குச் சாவடியில் யார்யார் இருக்கலாம், தேர்தல் பணியில் இருக்கும் வாக்காளர் வாக்களிக்கும் முறை, வாக்குச் சீட்டு எண்ணும் இடத்தில் யார் யார் அனுமதிக்கப்படலாம் என்பது போன்ற பல்வேறு விதிகள் இந்நூலில் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எளிய நடை இந்நூலுக்குப் பெருமை சேர்க்கிறது.

எஸ். எஸ். சுந்தரம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

